ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48] ருத்ரோத்காரி ஆண்டு மார்கழித்திங்கள் 10-1-84 [இதழ்

தம்மைச் சூழ்ந்து தானியக் கதிர்கள் விளைந்து முதிர

தம் கையிலும் தானியக் கதிரேந்தி,

அன்னை தானியலட்சுமியின் திருக்கோலம்

உழவர் திருநாளாகிய பொங்கல் திருநாளை முன்னிட்டு

இவ்விதழில் காட்சிதருகிறது.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

கல்லது நெஞ்சம்; இரும்பே
 கண்கள்மரம்; [யிருசெவி;
சொல்லுவ தும்பொய்; அவமே
 சாகரமாம் [தொழில், துக்க
அல்லலெலன் பங்குநின் அன்பர்
 மாகவைத்தாய்; [பங் கானந்த
நல்லது! நல்ல மதுரா
 நாயகனே [புரிச் சொக்க

— சொக்கநாதக் கலித்துறை 3

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

[illegible]

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43 | 10–1 –84 | இதழ் 2

உட்பொருள்

எண்		பக்கம்
1	இறைவா! ஏன் இந்தச் சீற்றம்?	73
2	தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	78
3	மானக்கஞ்சாறரும் தாயனாரும்	85
4	அபிராமி அந்தாதி ...	89
5	திருவாதிரையும் திருநாளைப் போவாரும் ...	94
6	துளசி ...	97
7	ஓவியக்கலை ...	98
8	விமானத்தைக் கண்டு பிடித்தது இந்தியனே ...	104
9	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருட் பணிகள் ...	107
10	தானம், தனம், வேள்வி ...	111
11	எதிர்காலம் ...	114
12	செய்திகள் ...	120
13	காலக்கணக்கில் அம்மை அப்பர் ...	122
14	அணைத்துலக முதல் சைவ சித்தாந்தக் கருத்தரங்கம் அ 3 ...	123
15	கேதாரம் நோக்கி ...!...	125

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 43	ருத்ரோத்காரி-மார்கழி—10—1—84	இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்.

இறைவா! ஏன் இந்தச் சீற்றம்?

திருக்குறள் :

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தமது நூலை அறம், பொருள், காமம் என்று மூன்ருகப்பகுத்தார். மூன்று கூறுபாடுகளையுடைய திருக்குறளில் பொருட்பாலே பெரியது. எழுபது அதிகாரங்களை யுடையது. இருந்தபோதிலும் திருக்குறளைக் குறிக்கவந்த சங்கநூல்கள் இதனை அறநூல் என்றே போற்றின. 'ஒருவர் செய்தி கொன்றோர்க்கு உய்தியில்லென, அறம் பாடிற்றே ஆயிழை கணவ' என்பது புறநானூற்று மதிப்பீடு. பதினெண்

கீழ்க்கணக்கு நூல்கள் பலவும் அறநூல்களேயாயினும், திருக்குறளையே அறநூல் எனக் குறிக்கும்நோக்குச் சிந்தனைக்குரியது.

அறமே அடிப்படை :

ஏனைய நூல்களில் பல, அறஞ்செய்து வாழ்க; பொருள் ஈட்டி வளர்க; காமம் நுகர்ந்து மகிழ்க; என விரிவாக வழி காட்டின. திருக்குறளும் இதைத்தான் கூறியது. ஆனால் அதன் அடித்தளநோக்கம் வேறு. 'அறஞ்செய்க' என்பது மட்டும் திருவள்ளுவர் கட்டளையல்ல; அறத்தையும் அறநெறி நின்று செய்க என்பது அவர் ஆணை; பொருள் ஈட்டுக என்பது ஒன்றே அவர் நோக்கமல்ல; பொருளையும் அறநெறி வழுவாது ஈட்டுக என ஆணைதந்தவர் அவர். எங்ஙனமாயினும் காமம் நுகர்க என்பது அவர் குறிக்கோளல்ல. காமத்தையும் அறநெறி பிழையாது துய்க்க என்பர் வள்ளுவர். மணிகள் பல நிறத்த வாயினும், அவற்றைக் கோர்த்துநிற்கும் நூல் ஒன்றுதல்போல அறம், பொருள், காமம் எனப் பால்கள்பலவாயினும், இவற்றின் ஊடே இழையோடி, இவற்றை இணைத்துநிற்கும் வலிய நாண் அறமே என்பது அறிஞர் பலருக்கும் ஒப்பமுடிந்ததே.

பரனை நினைக :

பிற்காலத்து ஔவையார் பாடல் ஒன்று அறம் முதலிய நான்கினையும் வேறு ஒரு கோணத்தில் விளக்குகின்றது.

" ஈதலறம் தீவினைவிட் டீட்டல் பொருள்எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித் — தாதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு "

இப்பாடலில்வரும் பரனை நினைந்து என்ற தொடரை இடைநிலைத் தீவகமாகக்கொண்டு, பரனை நினைந்து ஈதல் அறம்; பரனை நினைந்து தீவினைவிட் டீட்டல் பொருள்; பரனை நினைந்து காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்; பரனைநினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு, எனப் பொருள் கொள்ளல்வேண்டும். இறையுணர்வோடு செய்யும் அறமே நிலையாக நிற்கும். அறநெறி பிறழாமல் அறமுதல் நான்கினையும் இயற்றவேண்டுமென்பது நமதுமுன்னோர் வகுத்த செந்நெறி என்பது இதனால் விளங்குகின்றது.

பாயிரம் கூறுவன :

திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களைப் பாயிரம் என்பர். இது நூல் முழுமைக்கும் முகமெனப் பொருந்துகின்ற முகவுரையாகும். பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத்தல்என நான்கு அதிகாரங்கள் முறைப் படுத்தப்பட்டுள்ளன. பாயிரம் என்பது தெய்வ வணக்கமும், செயப்படுபொருளும் கூறும் நோக்குடையது. கடவுள் வாழ்த்தில் இறைவனையும், வான்சிறப்பில் அவன் சக்தியாகிய அருளிப்பாட்டின் விளக்கமாகத்தோன்றும் மழையினையும், நீத்தார் பெருமையில் அவன் ஆணையை நிலவுலகில் நடத்த வல்ல துறவியர் இயல்பையும், அறன்வலியுறுத்தலில் இறைவனின் கட்டளையாக மக்களிடம் வற்புறுத்தவேண்டுவது அறனே அன்றி வேறில்லை என்பதையும் நன்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

அறக்கருணை, மறக்கருணை :

திருக்குறளை ஆராயும் நோக்கில் எழுந்ததல்ல இப்பகுதி. மழை என்பது இறைவனின் சக்தியாகிய கருணை வெளிப்பாடு என்பதை எடுத்துக்காட்டவேஇவை கூறப்பெற்றன. இறைவன் கருணையை அறக்கருணை என்றும், மறக்கருணை என்றும் இரண்டாகக்கூறுதல்வழக்கு. இதனைத் திருவள்ளுவர் "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றுங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை" எனக் கூறிப்போந்தார். மழை பொழியாது நின்று வறட்சியால் உலகை வாட்டவும்செய்யும்; வாடிய உலகைப் பெய்து காக்கவும்செய்யும் அதிகம்பெய்து அழிக்கவும்செய்யும் என்பது திருவள்ளுவரின் கருத்து. தவறுகள் செய்யும்போது தண்டிப்பதும், நல்லன செய்யும்போது பாராட்டிப் பரிசளிப்பதும் உலகியலிலும் உண்டு இரண்டுமே ஒரே நோக்கின. மன்னவன் கோல்கோடினும், மக்கள் அறநெறி பிறழினும், மாதேவன் கோயில்களில் வழிபாடுகள் முட்டினும் மழை வளம் குன்றும் என்பது நமது அறநூல்களில் கூறப்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றம் :

தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் மழைவளம் குன்றியது. விளையுள் குறைந்தது; குடிநீருக்கே மக்கள் அல்லலுற்றனர்; வறட்சியால்மக்கள் அல்லலுற்று ஆற்றுதுவருந்தினர். தென்மேற்குப் பருவமழை இவ்வாண்டும் பொய்த்தது; வடகிழக்குப் பருவமழை ஓரளவு நம்பிக்கை தருவதாக அமைந்தது.

'மழை இனி இல்லை; பனிக்காலம் வந்தது' என்றிருந்த நேரத்தில், மார்கழித்திங்கள் தொடக்கத்தில் தமிழகம் எங்கணும் பெருமழை பெய்தது. காற்றும் இணைந்தது. தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளக்காடாயின' அறுபதுக்கும்மேற்பட்டோர் உயிர் நீத்தனர். கால்நடைகள் ஆயிரக் கணக்கில் மாண்டன. பயிர்கள் பல பகுதிகளில் நீரில் மூழ்கிச் சேத முற்றன. அரசும், அறஉள்ளம் கொண்டோரும் எடுத்துக் கொண்ட நிவாரண நடவடிக்கைகள் ஓரளவு மக்களுக்கு ஆறுதலாக அமைந்தன. பெய்யாது நின்று கெடுத்தவானம் பெய்தும் கெடுத்தமையை மார்கழியில்காணமுடிந்தது. இதுவும் இறைவனின் தண்டனைதானோ என எண்ணவேண்டியுள்ளது. இதுதான் மறக்கருணை என்பது.

மத்திய மாநில அரசுக்கு நன்றி :

வெள்ளத்தாலும், பயிர்ச்சேதத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கும் ஞான சம்பந்தம் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு ஆறுதலும் கூறுகின்றது. விரைவான நிவாரணப் பணிகளை எடுக்க முன்னதாக ஐந்து கோடி ருபாய் அனுமதித்து, மேலும் நிதி வழங்க ஆய்வுக்குழுவினை அனுப்பிவைத்துள்ள பாரதப் பிரதமரும், மத்திய அரசும் நமதுநன்றிக்குரியவர்கள். வெள்ளப் பகுதிகளைத் தாமே நேரில் சென்று கண்டு, அமைச்சர்களின் தலைமையில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ளச்செய்து, அரசு இயந்திரத்தைப்போர்க்கால அடிப்படையில்செயல்படவைத்து மக்கள் துயர் துடைக்க ஆவன செய்த தமிழகமுதல்வரின் மனிதாபிமானத்தையும், கடமையுணர்வினையும் ஞானசம்பந்தம் நன்றியோடு நினைவு கூர்ந்து பாராட்டுகின்றது.

பாடங்கற்போமா ?

நூல்களைப் படிப்பதும், ரசிப்பதும், பாராட்டுவதும் போதுமென நினையாது, அவைகூறும் அறநெறியைப் பின்பற்றி நடப்பது மக்களுக்கும், அரசுக்கும் கடமை என்பதை இவ்வாறான இயற்கை மாற்றங்கள் நினைவூட்டுவனவாகவே உள்ளன. மேலிருந்து கீழ்வரை எல்லா நிலைகளிலும் பண்பாட்டுக் குறைவும், நேர்மையின்மையும், கடமையைப் புறக்கணிக்கும் கயமையும் காணப்படுதலை அனைவருமே அறிய முடிகிறது. ஒன்றைச் சமுகத்தீமை என்று உணர்ந்த பின்பும் அதனை எதிர்த்துப் போராடும் துணிவின்றி, அத்தீமையையே வாழ்வின் ஒரு கூறாக ஏற்று அடங்கிப் போகும் தனிமனிதர்களின் இய

லாமை பேரவலமாகவே தோன்றுகின்றது. எது எங்ஙன மாயினும், என்னையும், என்குடும்பத்தையும் பாதுகாத்துக் கொண்டால் போதும் என்றுகருதும் சுயநலப்போக்கு அச்சத் தைத் தருகிறது.

அறநெறியில் உறுதிகொள்வோம் :

தனி மனிதர்களைக் குறைகூறிப் பலனில்லை. அவர்களை அறநெஞ்சினராக உருவாக்கும் கடமையும் பொறுப்பும் அரசுக்கு உண்டு. நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே என்றது புறநானூறு. அரசு பல்வேறு அலுவல்களுக்கிடையே மக்களின் பண்பாட்டு, ஒழுக்க நெறிகளையும் முறைப்படுத்தும் பணியினை யும் ஏற்கவேண்டியுள்ளது. பல்துறை அறிஞர்களைக் கொண்ட அறநெறிப்பாதுகாப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் வாயிலாகத்திட்டமிட்டு, மக்களை நெறிப்படுத்த வேண்டுவது இன்றியமையாதது. இல்லையேல், தனிமனித ஒழுக்கச்சிதைவால் சமூக நலத்திட்டங்கள் பயனற்று, பொதுவாழ்வே சீர்குலைந்து போய்விடும். இயற்கையின் தண்டனைகளைப் படிப்பினையாகக் கொண்டு நம்மை நாமே சீர்திருத்திக்கொண்டு அறநெறி பற்றி வாழ இனியாவது உறுதி பூண்போமாக.

கருணைபுரிவாய் :

கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பி ழையும் பொறுத்தருள்வாய் கச்சிஏகம்பனே.

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே — நீதி
தழைக்கின்ற பேரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறு நீ பேசு.

இறைவா நின் கோயில்களில் பூசை முட்டுப்படுகிறது. உன் பணியாளர்கள் உணவின்றி வாடுகின்றனர். அடித்ததுபோதும் அணைத்திடல் வேண்டும். சிறியோர் செய்த பெரும்பிழை யெல்லாம் பொறுத்து அருள்புரிய வேணுமாய் மக்கள்சார்பில் ஞானசம்பந்தம் வேண்டுகிறது. மறக்கருணைபோதும், அறக் கருணைகாட்டி அருள்க. குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையினுலேனும் நின் மக்களை, மன்னுயிர் களைக் காத்தருள்க.

" மகவுநாம் நீ தாய் அளிக்கொணுதோ
தகவுபெறத் தண்ணருளி ந்திடுவாய் நீயே "

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காக ஹரத்துவாரிலிருந்து இராமேசுவரத்திற்குப் புனித கங்கையின் தெய்வீகப் பெருவுலா நிகழ்ந்தபோது தஞ்சையில் நடைபெற்ற வரவேற்பு விழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

13—12—83

" கடுத்துவரும் கங்கைதனைக் கமழ்சடையொன் றுடாமே
தடுத்தவரெம் பெருமானூர் தாமினிதா யுறையுமிடம்
விடைத்துவரும் இலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. "

பாரதமாதாவும், கங்காதேவியும் திருவுருவங்களாக, வடகோடி ஹரத்துவாரிலிருந்து தென்கோடி இராமேசுவரத்திற்குத் திருவுலாக்கொள்ளும் சிறப்பைப் போற்றி இங்கு விழாக் கொண்டாடப்படுகிறது. கங்காதீர்த்தம் இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமிக்கு அபிஷேகம்செய்ய இருப்பதும், பல தீர்த்தங்களில் கங்கையைச் சேர்ப்பதும், ஆங்காங்குள்ள பல தீர்த்தங்களையும் கங்கையில் சேர்ப்பதும் ஒற்றுமைக்கு வழிகோலும் உயர்நோக்கமாகத் திகழ்கின்றது. கொண்டும் கொடுத்தும் குடி குடி ஈசற்கு ஆட்செய்யும் பாரதப்பண்பை நினைவூட்டுகிறது. இவை பாராட்டுதற்குரியன.

தாய்நாடு என்ற பொருத்தம்!

பாரதநாட்டை பாரதமாதா என்றும், கங்காநதியைக் கங்கா மாதா என்றும் பெண்ணாக – தாயாக உருவகித்து வழங்கும்

சொல்லாட்சி இங்குச் சிந்திக்கவேண்டியதொன்று. நம்முன்னோர்கள் ஆழமான சிந்தனையுடனும், கருத்துப் பொருத்தத்துடனும்தான் ஒவ்வொரு பொருளுக்கும் பெயர் சூட்டியுள்ளார்கள். நாட்டைத் தாய்நாடு என்றும், நதியைக் கங்காதேவி என்றும், காவிரித்தாய் என்றும் உருவம் கொடுத்து வழங்கி வருகிறோம். இப்பெயர்களில் எவ்வளவு பொருட்செறிவு உள்ளது என்பதை மக்கள் உணர்தல் மிகமிக இன்றியமையாததாகும்.

தந்தையானவன் கருவை அதாவது உயிரைத் தருகின்றான், தாயானவள் அவ்வுயிரைத் தன் கருப்பையில் ஏற்றுத் தன் உடம்பில் உள்ள வயிற்றிலேயே பத்துமாதம் உருவாக்கி வளர்த்துவருகின்றாள். அவள், தன்குழந்தை கருவாகயிருந்து, உருவாகி வெளிவரும் காலத்திலும், பின் குழந்தை பிறந்த ஓராண்டுக் காலத்திலும் தன் உடலிலிருந்து பால் உணவு நல்கிக் காப்பாற்றுகின்றாள். கருவைக்கொடுக்கும் பொறுப்பே தந்தைக்குரியது. அக்கருவை ஏற்று உருவாக்கும் பொறுப்புத் தாய்க்கே உரித்தாயுள்ளது.

இத்தாய் வளர்த்துவிட்ட ஓராண்டுக் குழந்தையைப் பின் உணவுகொடுத்துக் காப்பாற்றுபவள் யார்? அவளே பூமித்தாய். அத்தாயே அக்குழந்தையைப் பின் வளர்த்து ஆளாக்குகிறாள். அக்குழந்தை பசும்பாலை உண்டால்கூட, அதுவும் அப்பசு உண்ணும் பசும்புல்லின் பயனே என்பதனை எல்லோரும் அறிவர். எனவே உயிரைத்தரும் தந்தையும், அவ்வுயிரைப் பத்துமாதம் வயிற்றிலும், ஓராண்டுக்காலம் தன் உடல் நல்கும் பாலிலும் காப்பாற்றும் தாய்க்கும். காலம் எல்லாம் உணவு நல்கிக் காக்கும் அன்னை, பூமித்தாயேயாவாள் என்பதனை நுண்ணிதின் எண்ணியே நம் முன்னோர்கள் நாட்டைத் தாய்நாடு என்று போற்றினர். பெண்ணிற்கும் மண்ணிற்கும் உள்ள ஒற்றுமையை எண்ணி வியந்தனர்.

தாய், பூமி என்றால், தந்தை யார்? எனும் கேள்வி எழுவது இயற்கை. சூரியன்தான் தந்தை. தந்தையிடமிருந்து வித்து வருகிறது, அவ்வித்தினை ஏற்றுக் காத்துக்கொடுக்கும் சக்தி அன்னையிடம் இருக்கிறது. எனவேதான் வன்மையும் வெம்மையும் உடைய பொருள்களை ஆணாகவும், மென்மையும் தண்மையும் உள்ள பொருள்களைப் பெண்ணாகவும் கண்டு போற்றுகிறோம்.

பெற்ற தாயும் பேணும் தாயும் :

கங்கை, காவிரி, பொருனை முதலிய நதிகளைத் தாயென்று ஏன் அழைக்கிறோம் என்பதுபற்றி இங்கு மேலும் சிந்திப்போம்! தமிழ் இலக்கியங்களில் பெற்ற தாயை நற்றாய் என்றும், வளர்ப்புத்தாயைச் செவிலித்தாய் என்றும் வழங்குவர். இவ்வகையிலேயே பூமி எனும் அன்னை நற்றாயாகப்போற்றப்படுகின்றாள். நதி எனும் தாய் செவிலித்தாயாக அழைக்கப்பெறுகின்றாள். இதனால்தான் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணத்தில், தாமிரபர்ணி என்னும் நதி, மருதநிலம் எனும் கன்னியைப்பருவத்திற்குத் தக்கபடி ஆராய்ந்து செவிலித்தாயைப்போல் வளர்க்கிறது என்று குறிக்கின்றார்.

" கரைபடு மருதமென்னும் கன்னியைப் பருவம்நோக்கித்
திரைபடு பொருநைநீத்தம் செவிலிபோல் வளர்க்கும்மாதோ"

என்பது அப்புராணப்பகுதி. எனவே பூமியைப் பெற்றதாயாகவும் நதியைப் பேணிவளர்க்கும் செவிலித்தாயாகவும் எண்ணி முன்னோர் போற்றினர். கம்பரும்.

" சரயு வென்பது தாய்முலை யன்ன திவ்
வுரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம் "

என்று இக்கருத்தினையே வலியுறுத்துகின்றார்.

தாய்மொழி, தாய்மதம் :

இங்ஙனம், உடலை வளர்க்கும் பூமி, நதி எனும் இரண்டையும் தாய் எனும் புனிதச் சொல்லால் போற்றிய நம் முன்னோர்கள், மொழியையும் மதத்தையும் கூடத் ' தாய் ' என்னும் அடைமொழிகொடுத்தேபோற்றினர். உடலை வளர்க்கும் தாய், பூமியும் நதியும் எனில், உணர்வை வளர்க்கும் தாய், மொழியும் மதமும் என்று எண்ணிப்போற்றினர், மொழி கலையுணர்வை வளர்க்கிறது. மதம் மெய்யுணர்வை வளர்க்கிறது. எனவேதான் மொழியைத் தாய்மொழி என்றும், மதத்தைத் தாய்மதம் என்றும் வழங்குகின்றோம்.

இங்ஙனம் நாட்டிற்கும் நதிக்கும் மொழிக்கும் மதத்திற்கும் தாய் உருவம்கொடுத்து வழங்குவதைப் பலர் விவரம்தெரியாமல் விமர்சிக்கின்றனர்.

உருவம் உணர்த்தும் உண்மை :

சமயநிலையில். கல்வியைச் சரஸ்வதி என்றும், செல்வத்தை லட்சுமி என்றும், வீரத்தைக் கொற்றவை என்றும் உருவம் கொடுத்து வழங்குகின்றோம். இங்ஙனம் எந்தக்கருத்தையும் உருவம் கொடுத்து வழங்குவதில் தவறில்லை. உருவங்கள் சில உண்மைகளை உணர்த்துகின்றன. உண்மைகளை உணராமல் உருவங்களைப் போற்றுவதில் பெரிதும் பயன் இல்லை. ஒரு புத்தகத்தில் அறிவுக்கருத்துக்கள் இருக்கின்றன என்கின்றோம். புத்தகத்தில் அறிவு எங்கே இருக்கிறது எனில், அதிலுள்ள எழுத்துக்கள் எனும் உருவங்களினுள்ளே இருக்கிறது. எழுத்துக்கள் எப்போதும் அறிவு ஆகா. அவ்வெழுத்துக்கள் உணர்த்தும் கருத்துக்களே அறிவாகும். யானை எனும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் யானை எனும் பொருளை நமக்கு உணர்த்துகிறது. அவ்வெழுத்துக்கள் யானை ஆகா. அது போலவே பூமாதேவி. காவிரித்தாய், தமிழ்த்தாய் மற்றும் தெய்வத் திருவுருவங்களும் சில பல உண்மைகளை நமக்கு உணர்த்துகின்றன. அத்திருவுருவங்கள் உணர்த்தும் அறிவியல் உண்மைகளைத் தக்காரிடம் கேட்டுணர்தல் மக்களின் தலையாய கடமையாகும்,

கங்கைவந்த வரலாறு :

கங்கை இந்த மண்ணுலகிற்கு வந்ததற்கு ஒரு வரலாறு உண்டு. அதனைக் கந்தபுராணத்தில் கச்சியப்பர் கூறுவதைக் காண்போம்.

திருக்கயிலாய மலையில், ஒரு சோலையில் சிவபெருமான் வீற்றிருந்தார். அப்போது உமாதேவியார் விளையாட்டாகச் சிவபெருமானுக்குப் பின்புறம் வந்து தம் திருக்கரங்களினால் அவருடைய இருகண்களையும் மூடினார். உடனே புவனங்கள் எங்கும் இருள் பரவியது. உமாதேவியார் சிவபெருமானின் திருக்கண்களை மூடிய அக்கணப்பொழுது உயிர்களுக்கு எல்லையில்லாத ஊழிக் காலங்கள் ஆயின. அதனைக்கண்டு சிவபெருமான் உயிர்களுக்கு அருள்புரியத் திருவுளம்கொண்டார். தமது நெற்றியிலிருந்து ஒரு திருக்கண்ணை உண்டாக்கி எங்கும்நோக்கிப்பேரிருளைமாற்றியருளினார். சூரியன்முதலியோர் இழந்த தங்கள் ஒளியை மீண்டும்பெற்றார்கள். சிவபெருமானின் செய்கையைக்கண்ட உமாதேவியார் அஞ்சி நடுங்கித் தாம் மூடிய கைகளைத் துண்ணென்று எடுத்தார். எடுக்கும்பொழுது தமது பத்து விரல்களிலும் பயத்தினால் வியர்வை தோன்ற

அதனை உமாதேவியார் பார்த்துத் திருக்கரங்களை உதறினர். அவ்வியர்வைப் பத்துக்கங்கைகளாகி, நூறுகோடி முகங்களைப் பெற்றுக் கடல்களைப்போல் எங்கும் பரவியது. அதனைக் கண்ட திருமால், பிரமன், இந்திரன் முதலியதேவர்களும் பிறரும் அஞ்சி நடுங்கிச் சிவபெருமானை அடைந்து, வணங்கி, "எம்பெருமானே எங்களைக் காத்தருளும்" என்று வேண்டினர்கள். சிவபெருமான் அந்நதியின் வரலாற்றை அவர்களுக்குச் சொல்லி அதனை அழைத்துத் தமது ஜடாபாரத்திலுள்ள ஒரு முடியின் மீது விடுத்தார். கங்கையின்பெருக்கு உடனே அடங்கியது. அதனைக் கண்ட திருமால், பிரமன், இந்திரன் ஆகிய மூவரும், "பெருமானே, கங்கை உமது அருட்சக்தியாகிய உமையின் திருக்கரத்தில் தோன்றியமையாலும், உமது திருச்சடையில் சேர்ந்தமையாலும் பரிசுத்தமுடையது. அதனை எங்கள் நகரங்களுக்கு எடுத்துச்செல்லுமாறு சிறிது கொடுத்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்கள். சிவபெருமான் தமது திருச்சடையில் புகுந்திருந்த கங்கையில் சிறிது எடுத்து மூவருக்கும் வழங்கியருளினர். நான்முகனின் உலகத்தை அடைந்த கங்கையைத்தான் பகீரதன் தம் முன்னோர்கட்கு நற்பேறு கிடைக்கக் கடுந்தவம்புரிந்து நிலவுலகிற்கு வருமாறு செய்தான். கங்கை நிலவுலகை நோக்கி ஆங்காரத்துடன் ஓடிவந்தது. அதனைக்கண்டு யாவரும் நடுங்கினர். கருணைக் கடலாகிய சிவபெருமான் அக்கங்கையை மீண்டும் தம்திருமுடியில் தாங்கிப் பின்னர் பூமியில் செல்லுமாறு விடுத்தார். அதுவே கங்கோத்திரியில் உற்பத்தியாகி ஹரித்துவாரில் பூமியில் பாய்ந்து காசியில் ஓடிவரும் கங்கையாகும்.

காசியின் புனிதம் :

இங்ஙனம் கங்கை பகீரதனின் பெருமுயற்சியால் இம்மண்ணுலகை அடைந்தது. சிவபெருமான், வேகமாக ஓடிவந்த கங்கையைத் தம் சடைமுடியில் தாங்கியருளினர் என்பதைத் திருஞானசம்பந்தர்,

> "கடுத்துவரும் கங்கைதனைக் கமழ்சடை யொன்றுடாமே
> தடுத்தவர் எம் பெருமானர்......... "

என்று திருப்புள்ளிருக்குவேளூர்த் தேவாரத்திலும்,

> "பண்டுபகிரதன் வேண்ட, ஆர்த்துவந்திழியும் புனல்கங்கை
> நங்கையாளைநின் சடைமிசைக் கரந்த, தீர்த்தனே "

என்று சுந்தரர் திருப்புன்கூர்த் தேவாரத்திலும் போற்றி அருளியுள்ளனர்.

தண்ணீரிலோ அல்லது உணவிலோ மனிதமுடிமயிர் விழுந்துகிடந்தால் அதனை அசுத்தமானது என்று தள்ளிவைத்து விடுகின்றோம். பெருமானின் சடைமுடியில்பட்டுவரும் கங்கை நீரைப் புனிதநீர் என்று போற்றுகின்றோம். இறைவனுக்குரிய எண்குணங்களில் ஒன்றான தூய உடம்பினன் ஆதல் எனும் தத்துவத்தை இது உணர்த்துகிறது.

நதிகள்காட்டும் ஒற்றுமை :

கங்கைநதி இம்மண்ணுலகில் ஓடிவரும்பொழுது தன்னைச் சார்ந்துள்ள யமுனை, கோமதி, கோக்ரா, சாரதா, கண்டகி, கோசி, சம்பல் எனும் ஆறுகள் இதனுடன் சேர்ந்து கலந்து ஓடி வருகின்றன. எனவே கங்கை என்பது ஒருதனிநதியாக ஓடிவர வில்லை. சில நதிகளைத் தன்னுடன் இணைத்தே ஓடிவருகின்றன. பின்னர் மக்கட்குப் பயன்தருதற்குப் பாகீரதி, பத்மா என்று பிரிந்துசென்று ஆங்காங்கே பாய்ந்து வளம் சேர்க்கும் சிறப்பு அதற்குண்டு. இதேபோன்றே காவிரியும் கபினி, பவானி, நொய்யல், அமராவதி என்னும் ஆறுகளுடன் கலந்து ஓடி மக்கட்குப் பயன்தருகிறது. இதிலிருந்து ஒருண்மையைப்புரிந்து கொள்ளலாம்.

இன்று நாட்டிற்கு நன்மை செய்யும் மனநிலைகொண்டவர்களிடையே பல்வேறு கருத்துவேறுபாடுகள் உள்ளன. குடும்பமும், சமுதாயமும் அப்படியே உள்ளன. அதனால் அவரவர்களும் தங்கள் தங்களுக்குப் பெயரும், புகழும் வரவேண்டும் என்று தனித்தனியே பிரிந்துநிற்கின்றனர். இதனால் உழைப்பும் பொருளும் விரயமாகின்றன. நாட்டிற்குப் பெருமளவு நன்மை இல்லை. எனவே இவர்கள் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை நதிகளைப் பார்த்தேனும் மறந்து, எப்படியும் நாட்டுமக்களுக்கு நலன்கள் செய்யவேண்டும் என்னும் ஒரே நோக்கில், நல்லதரமும் செயல்திறமும் கொண்ட ஒருவரின் தலைமையின்கீழ் ஒன்றுசேர்ந்து பாடுபட்டால் அனைவருக்கும் பெரும்பயன் விளையும்; அவர்களுக்கும் பெருமைவரும். இதனை இந்நாட்டிலுள்ள குடும்பத்தினரும், சமுதாயத்தினரும், தலைவர்களும் உணர்வார்களா? கங்கையில்சேரும் சிறு சிறு ஆறுகள் தனித்தனியே இருந்தால் – நாட்டை வளப்படுத்தவிரும்பினால்– இவ்வளவு பயன் கிடைக்குமா? அவை அனைத்தும் பெருமை மிக்க கங்கையில் கலந்து, கங்கை என்ற ஒரே பெயருடன் விளங்கிப் பின்னர் பயன்பெறும் இடம் நோக்கி ஆறுகள், கால்வாய்களாகித் தோற்றுவித்தோர்போன்றோரின் பெயர்

தாங்கிப் பல கிளைநதிகளாய் எங்கும் ஓடிவருவதால் அவற்றிற்கும் பெருமைசேர்கிறது; நாட்டிற்கும் வளம் சேர்கிறது. எனவே தனித்தனியே பிரிந்து, சிறுசிறு கூட்டமாகநின்று, பணிபுரிவதைத்தவிர்த்து வேற்றுமையை மறந்து, அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு தலைமையின் கீழ் பல்வேறு பயனுறு கிளைகளாய்ப் பிரிந்து நாட்டிற்குத் தொண்டாற்றவேண்டும். இங்ஙனம் செயல் படுவார்களாகில் மக்களும் மதிப்பர்; பலன்களும் பெருகும். இது இந்நதிகள் நமக்குக் கற்றுத்தரும் சிறந்த பாடம் ஆகும்.

புண்ணியநாடு !

இந்தியப் பெருநாடு சமய அடிப்படையில் ஒன்றுபடும் உன்னதநாடு என்பதை அனைவரும் உணர்வர். இந்நாட்டின் எல்லையைக்கூறும்பொழுதுகூடத் தலங்களைமையமாகவைத்துக் காசி முதல் இராமேசுவரம் வரை என்றும், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்றும் கூறும் பழக்கம் உண்டு. வடக்கே தந்தையாகிய இறைவனும், தெற்கே தாயாகிய கன்னியாகுமரியும் இருந்து மக்களைக் காப்பாற்றிவருகிறார்கள். தாயும் தந்தையும் இருபக்கமும் இருந்து இடையில் உள்ள பாரதமக்களாகிய நம்மைக்காப்பாற்ற, அவர்களின் கட்டுக்குள் நாம் அடங்கி வாழ்ந்துவருகின்றோம் என்பது எண்ணி மகிழத் தக்கது.

வாழ்த்து !

இத்தகைய புண்ணிய நாட்டில் ஓடிவரும் பெருநதிகளில் ஒன்றான கங்கையைத் தென்னகத்திற்குத் திருவுலாவாகக் கொண்டுவந்துள்ள இச்சிறப்பு நிகழ்ச்சியினை நடத்திவரும் விஸ்வ ஹிந்து பரிஷத் அன்பர்கள், இதுபோன்ற நற்செயல்கள் பலவும் செய்துவருகின்றனர். அவர்கள் எண்ணம் முழுமை பெறவும், இப்பணியில் பங்குபற்றியுள்ள அன்பர்கள் பலரும், வரவேற்றுச்சிறப்பித்த தஞ்சைப்பெருமக்களும்,பொதுமக்களும் நலம்பல பெற்று நீடு வாழவும், எல்லாம்வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

" பாரதபூமி பழம் பெரும்பூமி
நீரதன் புதல்வர் இந்நினைவகற் றாதீர் "
" பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே "
" ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே "

என்ற அமரகவி பாரதியின் அரியவாக்கை நினைவுகூர்ந்து செயல் படுத்துவோமாக.

வாழ்க சமயம் ! வளர்க ஒற்றுமை !!

மானக்கஞ்சாறரும் தாயனரும்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.,

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 4—12—1983 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தை ஒட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

தருமையாதீனத்தில் ஓர் அற்புதமான நூலகம். வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், இலக்கியங்கள், முதலிய பலத்துறைப்பட்ட இந்தியக் கலா சாரத்தின் பிரவாகம் அந்த நூலகத்தில் பரவி நம்மைப் படிக்கத் தூண்டுகிறது! தமிழ், வடமொழி, ஆங்கிலம், பிரஞ்சு இன்னும் பலமொழி நூல்களும் சுவடிகளும் அறிஞர்களின் அதிசயிக்கத் தக்க அறிவை நமக்குப் புலப்படுத்தி நம்மை நெறிப்படுத்து கின்றது. பதினோராயிரத்துக்கும் மேற்பட்ட அரியநூல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட ஆதீனநூலகம் ஓர் அரிய பொக்கிஷம்!

நூலகத்திலிருந்து வெளியே எட்டிப்பார்த்தேன். காவலர் - அவரைச் சிப்பாய் என்பது பழக்கம் - மணியடிப்பதற்காகச் செல்கிறார். மணி பத்து.

ஆதீனப் பண்டாரக்கட்டில் அன்பர்கள் திருநீறுபெற்று அமர்கின்றார்கள். பிரார்த்தனையை அடுத்துக் குருமணிகள் உபதேசித்தார்கள்

'ஒருகல்லில் இரண்டு மாங்காய்' என்பார்களே! எங்களைப் பொறுத்தவரை அன்று அப்படித்தான்.

திருத்தொண்டர் புராணச் சிந்தனையாக மானக்கஞ்சாறர் வரலாற்றைக் குருநாதர் உபதேசிப்பார் என்று எதிர்பார்த்துத் தான் அத்தனை பேரும் சென்றோம். ஆனால், மானக்கஞ்சாறர் வரலாற்றுடன் அரிவாள்தாயர் புராணத்தையும் அல்லவா, அன்று உபதேசிக்கின்றார்கள்.

ஏன் ?... அங்கேதான் அவர்களின் தனித்தன்மை பளிச்சிடுகிறது! மனிதநிலையின் வேறுபட்ட மாமுனிவரின் குருத்துவம் வெளிப்படுகின்றது! இவைபோன்றவைகளைக் கற்று வாழத்தானே நாம் ஆதீனத்தை நோக்கிச் செல்ல வேண்டும்! -புனிதத்துவங்கள் மனிதத்துவத்தில் பொருந்த வேண்டுமானல் தருமைக்கு வர வேண்டும்.

திருத்தொண்டர் புராணம் என்றவுடனே திருத்தொண்டர் திருவந்தாதியையும் இவற்றுக்குக் காரணமான திருத்தொண்டத் தொகையையும் அவர்களால் தனிமைப்படுத்த முடியவில்லை.

"மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்"

என்ற சுந்தரர் வாக்கு குருமணிகளின் ஞானத்திருவுளத்தில் அழுந்திநிற்கின்ற காரணத்தால் இரண்டையுமே உபதேசித்தார்கள். இப்படி இருவர் இருவராக ஒரே அமைப்பில் சுந்தரரால் குறிக்கப் பெற்ற நாயன்மார் பட்டியலையும் தந்து சிந்தனையாளர்களையும் ஆய்வாளர்களையும் ஆரமுது உண்பித்தார்கள்.

இடையிடையே பலதத்துவ முத்துக்களைக் கோவையாகத் தந்து சச்சிதானந்தம் என்னும் சொற்பொருள் விளக்கத்தையும் அருளினர்கள்.

உள்பொருளாக, தானே அறிவுடையதாய், இன்பமே வடிவாக இருப்பது இறைநிலை - இதுவே சத்து-சித்து-ஆனந்தம் (சச்சிதானந்தம்) எனப்படுகிறது. "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்றுரே அப்பர் அடிகள்! அந்த வாக்கினையும் இயைத்து அருளினர்கள். இதை ஒட்டி ஓர் உபதேசமும் செய்கின்றார்கள்.

'துன்பம் நமக்கு நல்லதோழன்; துன்பம் வரும்போதுதான் மனிதன் சிந்திக்கத் தொடங்குகிறன்; 'சுடச் சுடரும் பொன்' என்பது போலத் துன்பம் அடைய அடைய மனிதன் தற்சோதனை செய்து கொள்கின்றன். உயர்நிலை அடைகிறன்." இவ்வாறு துன்பத்தின் இன்றியமையாமையை உணர்த்திய குருமணிகள், இறைவன் இன்பமயமானவனுக இருக்கின்ற தன்மையைத் தெளிவித்தார்கள்.

சம்புவாக - இன்பத்தின் இருப்பிடமாக - பிறப்பிடமாக - ஊற்றுக்கண்ணுக விளங்குதலை - சுகம் அளிப்பவனுக இருத்

தலைத் தக்க சான்றுகள் காட்டி மனம் கொள்வித்தார்கள்,

தத்துவக்கோட்பாடுகளை விளக்கிய வண்ணமே நாயனார் வரலாற்றுக்குள் நம்மை இட்டுச் செல்கிறார்கள்.

மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறர் - மானம் - பெருமை; கஞ்சாறர் - கஞ்சாறூரர் என்றனரினர். மலைபோன்ற தோள் வீரத்தையும், வள்ளல் என்பது அவரது தண்ணளியை யும் குறிப்பது - மொத்தத்தில் கஞ்சாறர் புஜபலபராக்கிரமம் உடையவர் என்று அருளினார்கள்.

நமக்கு ஓர் ஐயம், கஞ்சாறூர் எங்கே இருக்கிறது என்று.

கஞ்சாறூர் வடகஞ்சாறூர், தென்கஞ்சாறூர் என இரண்டு உண்டு. மயிலாடுதுறையைச் சார்ந்த ஆனந்ததாண்டவபுரம் வடகஞ்சாறூர் எனப்படும். இங்கே வாழ்ந்தவர் கஞ்சாறர். தலைஞாயிறுக்கருகில் இருப்பது தென்கஞ்சாறூர் - என்று விளக்கம் அருளினார்கள். மேலும் வடகஞ்சாறூர் இறைவன் திருநாமம் நாயனார் வரலாற்றுடன் தொடர்புடைய பெயராக பஞ்சவடீசுவரர் என்று இருப்பதையும் காரணமாகக் காட்டி யருளினார்கள்.

'கருப்பஞ்சாறு ஊர் என்பது கஞ்சாறூர் என ஆகியிருக்க லாம்' - என அருளி "வயற் கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர்" எனச்சேக்கிழார் குறித்துள்ளமையைச் சுட்டிக்காட்டினார்கள்.

கஞ்சாறூர்; வேளாளர் குலம்; சேனபதிக்குடி; தம் செல்வம் அனைத்தும் சிவனடியார்க்கே எனும் கொள்கை; கற்பு நலம் சான்ற மனைவி - கஞ்சாறரரைப்பற்றிய குறிப்புக்கள் இவை.

"மழைக்குதவு பெருங்கற்பின் மனைக்கிழத்தி"

எனச்சேக்கிழார் கஞ்சாறர் மனைவியின் சிறப்பைக் குறிப்பிடு கிறார். குருமணிகள் இதனை அற்புதமாகவிளக்கி அருளினார்கள்.

'மழைக்குக் கற்பு உதவும்' என்ற உண்மையை "வேதம் ஓதிடும் வேதியர்க்கோர்மழை" என்ற பாடலைக் கொண்டும்

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்ற திருக்குறளைக் கொண்டும் ஒப்பிட்டமை மிகச்சிறப்பாக அமைந்தது.

தருமையாதீனம் 14ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ கந்தப்ப தேசிகர், மழைவேண்டி அன்பர்கள் துதித்தபோது அருளிய

"சைவ சமயமே சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில் — ஐவகையென்று
ஆனந்த வெள்ளத் தழுத்துவதே முத்திஎனில்
வானங்காள் பெய்க மழை"

என்ற பாடலை விவரித்தார்கள். இறைவன், பிழைபொறுத்து ஆட்கொள்பவன் என்பதைப் "பிறைசூடும் தெய்வம்" என்ற தொடர் காட்டுவதாக நயம்படவுரைத்து நெஞ்சில் நிறுத்தினார்கள். பிழையைப் பொறுத்துப் பிறையைச் சூடியவன்னல்லவா இறைவன்!

மானக்கஞ்சாறருக்கு இறையருளால் ஒரு பெண் மகவு பிறந்தது. சேக்கிழார் இதனைப் 'பிழைக்குநெறி தமக்குதவப் பெண் கொடியைப் பெற்றெடுத்தார்' என அருளினார்.

குருமணிகள் இப்பகுதியைச் சிந்தனையைத் தூண்டும் வகையில் விளக்கினார்கள். 'குழந்தை பிறப்பது புண்ணியப் பேற்றால் அமைவது. பெரும்பாலோர் ஆண் குழந்தை பிறத்தலையே விரும்புவர்; அதுவே சிறப்புடையது எனக்காரணங்களைக் காட்டியும் உரைப்பர்; ஆனால்சேக்கிழார், பெண்குழந்தையும் பிழைக்கும் நெறி உதவுவதே எனக் கூறிக் காட்டுகிறார் எனலாம். இப்பகுதி ஆய்வுக்கு உரியது என அருளினார்கள். மேலும் கஞ்சாற நாயனார்க்குப் பிழைக்கும் நெறியை அவர் மகளே உதவினர் என்பதைப் புராணம் கொண்டும் உணர்த்தினார்கள்.

பெண்குழந்தை பிறந்தது; வளர்ந்தது; மணப்பருவம் எய்தியது. சிவனடியே சிந்திக்கும் ஏயர்கோன் கலிக்காமருக்கு அம்மகளை மணம்முடிக்க நாள் குறித்தனர் பெரியோர்.

நாளை மணநாள்! இன்று எலும்புக்கோலம் பூண்டமாவிரதி கஞ்சாறர் இல்லம் நோக்கி வருகிறார்; வந்த மாவிரதி உரோமத்தால் ஆன விரிவான பூணூல் (பஞ்சவடி) தரித்தவர். கஞ்சாறர் தம் மகளை அவர்முன் விழுந்து வணங்கச் செய்கிறார்; மணமகளின் கூந்தலை மாவிரதி கண்டார். 'நீண்ட தழைத்த கூந்தல் எமது பஞ்சவடிக்கு ஆம்' என்றார். கஞ்சாறர் அடியார் நினைத்ததை அளிக்கும் வள்ளல் அல்லவா? உடனே வாளால் தம் மகளின் கூந்தலை அரிந்து கொடுத்தார்.

(தொடர்ச்சி 121 ஆம் பக்கம் பார்க்க.)

தருமை ஆதீனத்தில்
அனைத்துலக முதல் சைவசித்தாந்தக் கருத்தரங்கம்
ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட



பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
திரு. மணிசுந்தரம் அவர்களும்
மாயூரம் நகரப் பெருமக்களும்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத் தரிசித்தல்

தருமையாதீனம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காபரமேசுவரி ஆலய மகாமண்டபத் திருப்பணிக்குக்

காணிக்கைச் செலுத்தியவர்கள் விபரம்

(மலர் 43, இதழ் 1, பக்கம் 44 இன் தொடர்ச்சி)

	முன்வரவு ...ரூ.	32,754
195	திரு. வைத்திலிங்கம் செட்டியார் ஆடுதுறை ...	100
196	திரு. M. வீரமுத்துபிள்ளை அங்குவிலாஸ் திண்டுக்கல் ...	200
197	திரு. S. செல்வம் S/o ஷண்முகம் பிள்ளை கோமதி லாட்ஜ், திண்டுக்கல் ...	500
198	செல்வி. M. P. நிர்மலா M. A., சென்னை ...	100
199	திரு. S. வேதரத்தினம் விருத்தாஜலம் ...	25
200	திரு. V. கணேசன் கூறைநாடு, மயிலாடுதுறை ...	101
201	திரு. S. சம்பத்குமார் குத்தாலம் ...	101
202	திரு. S. ஷண்முகம்பிள்ளை கூடலூர், திட்டக்குடி	50
203	திரு. V. வீரமணி பூவிருந்தவல்லி ...	21
204	திரு. R. நரசிம்மலு பெங்களூர் ...	10
205	திரு. துரை. ஜெயாநந்தம் வடக்குவீதி, தருமபுரம்	25
206	திரு. G. பன்னீர்செல்வம் குத்தாலம் ...	201
207	திரு. பிரேம்குமார் திருவான்மியூர், சென்னை ...	51
208	திரு. N. சுந்தரம் மயிலாப்பூர், சென்னை 4 ...	11
209	திரு. கோ. பாண்டுரங்கன் பெருங்களத்தூர், சென்னை ...	70
210	திரு. தா. குருசாமி தேசிகர் மதுரை ...	51
211	திரு S. கணேசன் கருங்குயில்நாதன் பேட்டை	101
212	திரு. P. ராமனுஜம் தருமபுரம் ...	108
213	திரு. பொ. முத்தையன் தருமபுரம் ...	101
214	திரு. T. சிங்காரவேல் பிள்ளை இருக்கை ...	50
215	திரு. S. மகேஸ்வரலால் மதுரை ...	11
216	திரு. முருகா. கிருஷ்ணமூர்த்தி வாழப்பாடி, சேலம் ...	10
217	திரு. C. சாம்பசிவ குருக்கள் வைத்தீஸ்வரன்கோயில் ...	101
218	திருமதி. M. ரேவதி திண்டுக்கல் ...	10
	ஆக கூடுதல் ... ரூ.	34,863.

கட்டுரை எண். 44

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M. A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்.

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை, பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துரமேனியள், தீமை நெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43

அ. பரிபுரச்சீறடி

(1) முன்பாட்டில் கூறிய மறைகளாகிய சிலம்புகளை அணிந்த சிறிய திருவடிகளை யுடையவள்.

(2) "ஸிஞ்சான - மணி-பஞ்சீர பண்டித - ஸ்ரீபதாம்புஜா - ஒலிக்கின்ற இரத்தினப் பரல்கள் உள்ள சிலம்புகளால் விளங்கும் திருவடிகளையுடையவள் எனச் சகஸ்ரநாமம் புகழுகிறது. 'ரத்தின நூபுரம்' என்னும் இரத்தினப்பரல்கள்கொண்ட சிலம்புகளை அணிவிப்பதும், அம்பிகைக்குச்செய்யும் அறுபத்து நான்கு உபசாரங்களில் ஒன்ருகும்.

(3) அவளது சீறடிச்சிலம்புகள் எப்போதும் 'காப்பாற்றுகிறேன்' என அபயவாக்குக்களை ஒலித்துக்கொண்டேயிருக்கிறதென்று காஞ்சி மூககவி வருணிக்கிருர்.

அந்தச் சிலம்பணிந்த சீறடிகள் எப்போதும்எனதுமனதாகிற அரங்கில் ஆடிக்கொண்டே இருக்கட்டும், எனவும் அவர் வேண்டுகிருர்.

(4) வேதங்களையே சிலம்புகளாக அணிந்தபெருமைமிக்க அத்திருவடிகளை, அவற்றின் எளிவந்த தன்மையினை நோக்கிச் சீறடி (சிறியஅடி) என்ருர். அல்லது அறிவளவிற்கு அளவாகி வந்த தன்மை கருதிச் 'சீறடி' என்ருர் எனினும் ஆம்.

ஆ. பாசாங்குசை

(1) பாசம், அங்குசம் ஆகிய இரண்டினையும் கைகளில் தரித்தவள்.

(2) இடது பின்கையில் பாசம் என்னும் ஆயுதத்தையும், வலது பின்கையில் அங்குசம் என்னும் ஆயுதத்தையும் திரிபுர சுந்தரி கோலத்தில் அம்பிகை தாங்குகிறாள்.

(3) 'ராகஸ்வரூப பாசாட்யா' – 'ஆசையின் வடிவான பாசத்தைத் தரித்தவள்' எனவும், குரோதோங்கார அங்குசேஜ் வலா' – 'குரோதத்தின் வடிவான அங்குசத்துடன் விளங்கு பவள்' எனவும் சகஸ்ரநாமம் வருணிக்கிறது.

பாசம் இச்சா சக்தியினை உணர்த்தும் கருவி என்றும் அங்குசம் ஞான சக்தியினை உணர்த்தும் கருவி என்றும் சகஸ்ர நாம உரையாசிரியர்கள் விளக்குகின்றனர்.

(4) தன்னை வணங்கும் அடியார்களுக்கு நல்லனவற்றில் ஆசையினையும். தீயனவற்றில் குரோதத்தினையும் (வெறுப்பினை யும்) ஏற்படுத்தி அவர்களைக் காக்கும் கருவிகளாகவே இவை பயன்படுகின்றன. எனவே, அபிராமி அந்தாதியில் இரண் டாவது பாடலிலேயே அவற்றினை 'மென்பாசாங்குசம்' எனக் குறிப்பிட்டார்.

(5) மற்றும் பாசம் என்பது பிணிக்கும் கயிறுகும். அங்குசம் என்பது யானையினை அடக்கும் ஆயுதமாகும். தனது திருவடியினைப் பற்றியபின் பிற பற்றுக்களாகிய பாசத்தினை நீக்குபவள் அம்பிகை. அவ்வாறே புலன்களாகிய யானைகளை அடக்கும் ஆற்றலினை அடியவர்களுக்கு அருள்பவள் என்ப தனையும் உணர்த்தத்தான் 'பாசாங்குசை'யாகக்காட்சிதருகிறாள்.

இ. பஞ்சபாணி

(1) ஐந்து கணைகளை யுடையவள், (பஞ்ச பாணங்களை (அம்புகளையுடையவளை) 'பஞ்சபாணி' என்றார்.

(2) 'பஞ்சதன்மாத்ர ஸாயகா' – ஐந்து தன் மாத்திரை களாகிய அம்புகளையுடையவள் என்றுசகஸ்ரநாமம் கூறுகிறது. நாவின் சுவையறியும் ஆற்றல் 'ரஸதன்' மாத்திரையாகும். செவியின் ஒலியுணரும் ஆற்றல் 'சப்ததன்' மாத்திரை எனப் படும். நாசியின் மணம் உணரும் ஆற்றல் 'கந்த தன்மாத்திரை' எனப்படும். உருவங்களைக்காணும் கண்ணின் ஆற்றல் 'ருபதன்

மாத்திரை' எனப்படும். மெய்யின் தொடுபுலன் அறிவு 'ஸ்பரிஸ தன் மாத்திரை' எனப்படும். பஞ்சபூதங்களையும், பஞ்ச இந்திரியங்களையும் தந்தவள் அவற்றால் அவற்றினை அறிந்து அநுபவிக்கும் ஆற்றல்களாகிய தன்மாத்திரைகளையும் தந்திருக்கிறாள் என்பதனைக்காட்ட அவ்வைந்தினையும் பாணங்களாகக்கொண்டிருக்கிறாள்.

(3) அப்பஞ்சபாணங்களை ஐந்து மலர்களாகத் தாங்கியிருக்கின்றாள். அவை :— 1. தாமரை 2, சிவப்பு ஆம்பல் 3. செங்கழுநீர் 4. நீலோத்பலம் 5. மாம்பூ என்பர்.

(4) பஞ்ச பாணங்களும் அவற்றினை எய்யும் கரும்பு வில்லும் எதிரிகளைத் தாக்கும் போர்க் கருவிகள் அல்ல! அவற்றினால் காமபாணம் விளைவிப்பதுபோன்ற மயக்கவுணர்வுகளும் ஏற்படுவதில்லை. ஆனால் அவை ஆற்றல்களின்சின்னங்கள். நன்மையேபயப்பனவாகும்.

ஈ. இன்சொல் திரிபுர சுந்தரி

(1) இனிய சொல்லினைப் பேசும் திரிபுர சுந்தரி ஆவாள்.

(2) மூவுலகங்களிலும் சிறந்த பேரழகி, முப்புரங்களில் உறையும் அழகி, திரிபுரனின் துணைவியான அழகி எனப் பல வாறு பொருள் கூறுவர்,

(3) லலிதா சகஸ்ரநாமம் 'மஹாதிரிபுர சுந்தரி' என ஓரிடத்திலும், 'ஸ்ரீமத் திரிபுர சுந்தரி' என மற்றோர் இடத்திலும் குறிப்பிடுகிறது.

அறிவு, அறிபவன். அறியப்படு பொருள் என்ற மூன்றும் 'திரி புரம்' எனப்படும். சாதாரணமான அறிவு, அதனையுடையவன், அவன் அறியும்பொருள் என்னும் இவைதவிர இவற்றுக்கு அப்பாற்பட்ட, 'மெய்ப்பொருள், மெய்யறிவு, மெய்யறிவாளன்' என்ற உயர்ந்தநிலைக்கு 'மஹாதிரிபுரம்' என்றுபெயர். இத் திரிபுரத்தில் உறையும் அழகி என்பது முதலில் குறிப்பிட்ட நாமத்தின் பொருள்.

(4) இறைவன் மூவராக ஆவேன் எனச் சங்கல்பம் (திருவுள்ளம்) கொண்டான். மூன்று வடிவு கொண்ட அவன் 'திரிபுரன்' என்று அழைக்கப்பட்டான். எனவே, அவனது துணைவி, அதுவும் அழகியான துணைவி, திரிபுரசுந்தரி என்று

அழைக்கப்பட்டாள். இவ்வாறு காளிகா புராண மேற்கோள் காட்டிப் பாஸ்கரராயர் விளக்குகிறார். சிறப்புமிக்க ஈசனின் துணைவியாதலால் அவள் 'ஸ்ரீமத் திரிபுரசுந்தரி' ஆனாள்.

(5) மூன்று மூன்றாகவுள்ள அனைத்திலும் உறையும் அழகியாதலால் திரிபுரசுந்தரி ஆனாள். அம் 'மூன்றுகள்' பற்றி 'பொருந்திய முப்புரை' என்ற பாடல் விளக்கத்தில் விரிவாகக் கண்டோம்.

(6) அவ்வளவு மேலான நிலையில் இருந்தும், தான் மூவுலகப் பேரழகியாக இருந்தும், எப்போதும் இனிமையான சொற்களையே பேசுகிறாள். எப்போதும் மங்களமானவற்றையே அவள் பேசுவதால் அவளை சகஸ்ரநாமம் 'கல்யாணி' என்று புகழுகிறது.

(7) "சங்கீத மொழிக்கரும்பே!" என்றும், கரும்போ வெனும் சொல் உலகே!" என்றும் சிங்கை நமச்சிவாயர் தனது அந்தாதியில் அழைத்து மகிழ்கிறார்.

உ. சிந்துர மேனியள்

(1) சிவந்த திருமேனியுடையவள், 'சிந்துர வண்ணத்தினாள்' போன்ற இடங்களில் முன்னமேயே விளக்கங்கள் கூறப்பட்டன.

(2) அன்னையினைத் திரிபுரசுந்தரியாக அவளது பாச அங்குசந்தாங்கிய கோலத்தினைக் குறிப்பிடும் திருமந்திரப் பாடல்கள் வருமாறு :—

திரிபுரை, சுந்தரி, அந்தரி, சிந்துரப்
பரிபுரை, நாரணி, ஆம்பல் வண்ணத்தி,
இருள்புரை ஈசி, மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கும் மாமாது தானே.

தாளணி நூபுரம் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க் கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில் முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே.

நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றலில் மோகினி, மாதிருக் குஞ்சிகை
நன்றறி கண்டிகை நாற்காற் கரீடணி
துன்னிய நற்சுத்த தாமரைச் சுத்தையே.

ஊ. தீமை நெஞ்சில்..........செம்பாகத்து இருந்தவளே!

(1) மேறகூறிய திரிபுர சுந்தரியாரெனில் தீமைக்குக் காரணமான நெஞ்சினரும் வஞ்சம்மிக்கவர்களுமான அசுரர்கள் அஞ்சும்படி, மேருமலையினை வில்லாக வளைத்து எய்த, தீயினை ஒத்த வண்ணத்தனுகிய இறைவனின் உடலில் சரிபாகம்பெற்று உறையும சத்தியே ஆவாள்.

(2) திரிபுர அசுரர் அஞ்ச அவற்றினை அழித்த வரலாறு முதலியன "ஆளுகைக்கு......" என்ற பாடல் விளக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டன. தீமை நெஞ்சில் புரிபுர வஞ்சர் என்றதால் இறைவன் அவர்களது நெஞ்சத்தை நோக்கியது குறிப்பிடத்தக்கது.

(3) அவள் சிந்துர மேனியள். எரிபுரை மேனியனையே அவள் சேர்ந்தாள் என்பது இங்குள்ள நயமாகும்.

(4) 'செம்பாகம்' அல்லது சரிபாகம் கொடுத்தது இன்றைய புரட்சியுலகும், புதுமையுலகும் கண்டு வியக்கத்தக்க ஒன்ருகும். மனைவியினை Bettrer half என்று சொல்லும் வழக்கம் ஆங்கில மொழியில் உண்டு. அநாதிகாலமாகவே நமது கலாச் சாரம் அதனை வலியுறுத்தியது என்பதற்குத்தக்க சான்று அவள் செம்பாகத்து இருந்த கோலமேயாகும்.

(5) "முன்பாட்டில், சிவத்தினின்று சக்தி ஸ்புரித்தது சொன்ன நூலாசிரியர் இப்பாட்டில், அவள் சிவத்தினின்று பிரிந்து தனித்தத்துவமாய் திரிபுர சுந்தரியாகக் காட்சியளிப் பதைக் கூறுகிருர். ஒன்றியிருந்த காலத்தில் சக்தி அர்த்தநாரி யாக இருந்தாள். பிறகு அவனிடமிருந்து பிரிந்து சக்தி தத்துவ மாய் வெளிப்படுகிருள். அவளைத்தான் திரிபுர சுந்தரி என்று சாக்த சித்தாந்தம் கூறுகிறது" இவ்வாறு உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் விளக்குகிருர்கள். மேலும் அவர் தரும் எளிய வரைபடம் வருமாறு.

† இது பர பிந்து ரூபமான சிவம்.

* சக்தி ஸ்புரிக்கும்போது இப்படியாகிறது.

‡ பின்பு இப்படியாகிறது.

தம்பதிகளிடையே ஏற்றத்தாழ்வுகள் இருப்பின் அவை நீங்குதல் இப்பாடலின் பாராயணப் பலன் ஆகும்.

---

† இது சிவம். * இது சிவசக்தியுடன். ‡ இது சிவமும் சக்தியும்,

திருவாதிரையும் திருநாளைப்போவாரும்

திரு. இரா. பொன்னு எம், ஏ., எம். ஃபில்.,

ஆராய்ச்சியாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

திருவிழாக்கள் உழைத்துச்சோர்வுற்ற மக்களுக்குஉற்சாகத்தையும் களிப்பையும் ஊட்டுவதுடன், சமூக ஒற்றுமை உணர்வையும் கட்டுப்பாட்டினையும்வளர்ப்பதாயும், சமயப்பற்றையும் பண்டைய பாரம்பரிய நெறிமுறைகளை நிலைநாட்டுவனவாயும், விளங்குகின்றன. பல்வேறு சமயங்களைப் பாருக்களித்த பாரத நாடு ஏராளமான சமயத் திருவிழாக்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. தெய்வ அவதாரங்களின் பிறந்த நாட்களும், சமயமகான்கள் அவதரித்த திருநாட்களும் மிக்க ஆரவாரத்தோடு கொண்டாடப்பட்டு வருவதுடன், விண்மீன்களின் பெயரால் பல திருநாட்கள் தொன்றுதொட்டு நடந்து வருகின்றன. சித்திரையில் சித்திரையும், வைகாசியில் விசாகமும், ஆடியில் பூரமும், கார்த்திகையில் கார்த்திகையும், மார்கழியில் ஆதிரையும், தையில் பூசமும், மாசியில் மகமும், பங்குனியில் உத்திரமும் தமிழர்கள் விண்மீன்களின் பெயரால் அவ்வத்தினங்களில் நடத்திவரும் சில திருநாட்களாகும். தமிழக வைணவ ஆலயங்களும், சைவஆலயங்களும் கொண்டாடிவரும் திருவிழாக்களுள் நிறைமதிநாளொடு விண்மீன் கூடிவருகின்றதாகிய ஆவணித்திருவோணமும், கார்த்திகைத்தீபமும், மார்கழித் திருவாதிரையும் சிறப்புடையனவாகும். இங்கு திருவாதிரைத் திருநாளைப்பற்றியும் அதில் திருநாளைப் போவாரின் இயைபு பற்றியும் இக்கட்டுரை ஆய்கின்றது.

திருவோண விண்மீனை மாயோனாகிய விஷ்ணுவுக்குகந்த நாளாகப்பண்டைத்தமிழர்கள் கருதினர். "மாயோன் மேய ஓண நன்னாள்" என மதுரைக் காஞ்சி மாயோனுக்குரிய நாளாகவே ஓணவிண்மீன் வரும் நிறைமதிநாளைக் கூறுகின்றது. இதனைப் போன்று ஆதிரை விண்மீனுடன் சிவபெருமானை இணைத்து அன்றைய தினத்தை அவனுக்குரிய நாளாகவே தமிழ் உலகம் கொண்டாடிவருகின்றது. இச்சிறப்பினைக் கருதியே 'ஆதிரை முதல்வன்' எனப் பரிபாடலும், 'ஆதிரையான்' எனக் கலித்தொகையும் விளம்புகின்றன.

திருவாதிரைத் திருநாளைத் தமிழ்மக்கள் பண்டுதொட்டுக் கொண்டாடி வந்ததன் நோக்கம்பற்றிச் சித்தாந்த பண்டிதர்

ப. இராமநாதபிள்ளை கூறுகையில் ' உயிர்கள் ஆண்பெண்ணுக இணைந்து வாழும் வாழ்க்கை இணைவானது, அம்மையப்பனும் செம்பொருளின் திருவுள்ளத் திருக்குறிப்பேயாதலின், அத்திருக் குறிப்பையே அம்மையப்பன் திருவுருவத்தின் அருளடிப்படையாகக் கொண்டு, அம்முறையில் காணுவதே யாழ் இல்லாகிய திருவாதிரை வீடெனவும், திருவாதிரை நாள் மீனும் தீச்சுடர் போன்று செம்மீனுகத் தோன்றுவதாலின் அம்மீனையே செம்மேனி இறைவனுகியசிவனுக்குரியத் திருநாளாகவும் கொண்டாடினர் என்பர்.

சிவபெருமானைச் சுடர் உருவினனுய் – செம்பொன் போலத் திகழ் உருவினனுய் – செவ்வான் ஒளியினனுய் – மின்னெளியினனுய்க்கண்ட தமிழ்மக்கள் திருவாதிரைத்திருநாளை அவனுக்குரித்தாக்கியமை குறிப்பிடத்தக்கச் செயலாகும். சங்ககாலத்தில் திருவாதிரைத் திருநாளன்று தமிழ்மக்கள் சிவனைச் சிறப்புமிக்க வகையில் தொழுதேத்தினர் என்பதும், தைந்நீராடல் அம்பா ஆடல் என்றபெயருடன் இளமகளிர் கொண்டாடிவந்த பாவை நோன்பும் திருவாதிரை நாளில்தான் தொடங்கப்பட்டது என்பதும் சங்க இலக்கியங்கள் தரும் செய்தியாகும்.

பண்டைய சமயநெறிகளைச் செவ்வனே போற்றிய பக்தி இயக்கப்பெரியோர்களும், திருவாதிரைநாளினைச்சிவனுக்குகந்த நாளாக ஏற்றிப் பாமாலைச் சூட்டினர். ' ஆதிரை நாயகன் ' எனவும், ' ஆதிரை நாள் ஆதரித்த அம்மான் ' எனவும், ஆதிரை நாள் உகந்தான் ' எனவும், ' ஆதிரை நாளர் ' எனவும், 'ஆதிரை நாளாய் அமர்ந்தார்' எனவும், பற்பலவாக உரைக்கும் தேவாரத் திருமலர்கள். சங்ககால மகளிர் கொண்டாடிவந்த தைந்நீராடல். பக்திஇயக்கத்தில் மார்கழி நீராடல் எனப் பெயர் பெற்றுலும் அந்நீராடலும் திருவாதிரை நாளில்தான் ஆரம்பமாகியது என்பதினை 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னுளால் நீராடப் போதுவீர் போதுமினோ ' என்ற ஆண்டாளின் திருப்பாவை வரிகள் உணர்த்துகின்றன.

பக்தி இயக்கம் நடத்திய அடியார்கள் தமிழ்நாடு முழுவதிலும் நெடிய சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கோயில்கள் தோறும் சென்று அங்குறையும் இறைவனைத் தொழுது புகழ் பாடி, மக்களை அவ்வத்தலங்களில் உள்ள கடவுளரோடு ஈடுபாடுகொள்ளச் செய்தனர். அவர்கள் சென்று பாமாலைசார்த்திய தலங்கள் யாவும் பாடல் பெற்ற தலங்கள் என்ற பெருமை பெற்றன. அற்புதங்களும், தலபுராணங்களும் மிகுதியான

அளவில் உருவாயின. 'திருநாள் காட்சியோடு' இறைவனைக் கண்டு தொழுதேத்தித்தேவாரம்சூட்டப்பட்டது.சிலகுறிப்பிட்ட ஆலயங்கள் சில திருநாட்களோடு இணைக்கப் பட்டு விசேட மாகக் கருதப்பட்டன. அங்ஙனம் கடவுளரோடு தொடர்பு படுத்திப் போற்றியுரைக்கப்பட்ட திருநாட்கள் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் இன்றளவும் செவ்வனே கொண்டாடப் பட்டுவருகின்றன. திருவண்ணாமலையானுக்குக் கார்த்திகைத் தீபத்திருநாளும் சிதம்பரம், திருவாரூர், பேரூர், குற்றாலம், மதுரை ஆகிய திருத்தலங்களில் திருவாதிரைத் திருநாளும் சிறப்புடை யனவாயின.

தமிழ்நாட்டில் பிறசிவாலயங்களில் திருவாதிரைத் திருநாள் கொண்டாடப்பட்டுவரினும், திருவாரூர்உறையும்பெருமானுக்கு மிகச்சிறப்பாகக்கொண்டாடப்பட்டுவந்தபாங்கினைச்சேக்கிழார் உறுதிப்படுத்துவர். திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரைத் திருநாளினைப்பற்றிச் சேக்கிழார் பெருமான், 'திருவாரூர் கொண் டருளிய திருவாதிரை விழாவினைக் கண்டு மகிழ்ந்து உளம் களிப்பால் நிறைவதன்றி அதன் சிறப்பை அடியேன் எவ்வாறு எடுத்தியம்பிட முடியும்' (பெ. பு. திருநாவுக். 235) எனவியந்து நிற்கின்றார். எனினும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்கு கையில் சிதம்பரம் நடராசப் பெருமான் ஆலயத்தில் நடை பெற்றுவரும் திருவாதிரை விழாவே சிறப்புடையதாகத் தோன்றுகிறது.

சிதம்பரம் ஆலயத்தில் நடைபெறும் விழாக்களுள் திருவா திரைத் திருவிழாவே மிகவும் சிறப்புவாய்ந்ததாகக் கூறப் படுகிறது. இவ்விழாவினை ஆருத்ராதரிசனம் எனவும் அழைப்பர். நாடெங்கிலுமிருந்து இலட்சக்கணக்கான இறையன்பர்கள்வந்து இவ்விழாவைக் கண்டு இன்புறுகின்றனர். சிவபெருமானர் நந்தனர் மாமுனிக்கு காட்சிதந்து அருளியதை வெளிப்படுத்து வதே இத்திருவிழாவின் அடிப்படை நோக்கமாக இங்கு அமைந்துள்ளது. குலம், சாதி, இனவேறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்சென்று இறைவனைத் தூய அன்பினனுக வழுவிலா பக்தியினனுக தொழுதேத்திடும் அடியவர்க்கு, இறைவன் 'அடியாராகி' அருள் வழங்குவர் என்ற உயரியபக்திநெறியினை உணர்த்தும் பக்திஇயக்கம் தந்த நந்தனர் நாயனர்க்குத் திருவா திரைத் திருநாளில் தரிசனம் கொடுப்பதாய் நடைபெற்றிடும் உயர்வுதான் என்ன!

புரட்டாசித் திங்கள் உரோகிணி விண்மீன் நாளில் திருநாளைப் போவாராகிய நந்தனர் பெருமான் கனகசபையில் வந்து கற்பூரச் சோதியாய் சிவன் கழல் சேர்ந்ததாகக் கூறப்படு

கிறது. தில்லைவாழ் அந்தணர்களின் வேண்டுகோள்படித் தில்லைத்திருக்கோபுரவாயிலின் முன்னே சிவனின் திருவருளோடு செந்தீயினுள் புகுந்து, அந்தணராய் வெளிப்பட்டுத் தில்லை அந்தணர்கள் கைதொழ இறைவனருளில் கலந்தார் என்பது புராணம் தரும் செய்தியாகும். இங்கு கூர்ந்து நோக்கத்தக்கது என்னவெனில், செம்மீனான திருவாதிரை விண்மீன் நாளில் செஞ்சுடர் உருவினனான பெருமானே செந்தீயினுள் புகுந்து திருவருளாய்நின்ற நந்தனார்க்கு தரிசனம் அளிப்பதாய்க்கொண் டாடுவது சாலவும் இயைபுடையதாகத் தோன்றுகிறது.

இங்ஙனம் சங்கத் தமிழர் சிவனுக்குகந்திட்ட நாளை-பக்தி இயக்கச் சமயப் பெரியார்கள் போற்றிப் புகழ் பாடிய நாளை- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என சமத்துவ சகோதரத்து வத்தை உலகுக்குணர்த்திய, தமிழ் உலகம் தீண்டாச் சாதியென ஒதுக்கப்பட்ட, புலையர்சாதி ஈன்றெடுத்தநந்தனார் பெருமானுக்கு இறைவனருள் வழங்கிடும் திருநாளாகத்தில்லை நடராஜ சுவாமி களின் திருக்கோயிலில் கொண்டாடி வருவது, "பக்தி தந்த சமதர்ம சமய நெறியினையே" உணர்த்துகின்றது.

துளசி

இயற்கைத் தாவரங்களிலேயே துளசி மட்டுமே மனித இனத்திற்குத் தீங்கு செய்யும் "கரியமில வாயுவை" அதிக அளவில் கிரகித்து, மனிதன் உயிர்வாழ அவசியத் தேவையான ஆக்சிஜனை அதிக அளவில் வெளியிடுகின்றது.

துளசி ஒரு தலைசிறந்த கிருமி நாசினியாகப் பயன்படுகிறது. துளசியின்வாடை இருக்குமிடம் கிருமிகள் வருவதேயில்லை. வந்தாலும் அழிந்துவிடும். பூச்சிகள், பாம்புகள்கூடத் துளசி வளருமிடங்களுக்கு வராது. பெண்கள் கூந்தலில் சூடும் கதம்பத்தில் துளசி அழகை வழங்கும் பச்சை நிறத்தைமட்டுமே அளிப்பதில்லை. துளசியை இணைத்த மலர்களை மங்கையர் சூடும்பொழுது, தலையில் உள்ள பேன்கள் இருந்த இடம் தெரி யாமல் ஓடிவிடும். விஷ்ணு கோயில்களில் துளசித் தீர்த்தம் பிரசாதமாக வழங்குவது கபம்சம்பந்தமான பல இன்னல்கள் தரும் நோய்களை வளரவிடாமல்தடுக்கிறது. நோய் இருந்தாலும் நீக்கிச் சுகமளிக்கிறது. துளசி இலைகளைச் சுத்தம்செய்து தினம் காலையில் சிறிதளவு ஆண்கள் சாப்பிட்டுவருவது குடும்பக் கட்டுப்பாட்டுக்கு உதவும்.

நன்றி. தினமணிகதிர் 11—12—83

ஓவியக்கலை

தெய்வீகச் சிற்பப் பேரரசு, சிற்பகலாரத்தினம்,

ஓவியம். திரு. கே. நடராஜ்

(அரசின் அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி)

அக்களூர், கூறைநாடு, மயிலாடுதுறை.

மனிதன் ஒரு காலத்தில் காட்டை அழித்து நாடாக்கி வளம் பெருக்கி வாழ்ந்தான். அப்பொழுது போரில்லை பூசல் இல்லை. நாடு அமைதியாக இருந்தது. அப்படி அவன் வாழ்ந்த நாடு அமைதியாக இருந்த காலத்தில்தான் மனிதனின் மனம் இயற்கைப் பொருள்களை ஆராயத்தொடங்கியது, அந்த ஆராய்ச்சியின் பயன்தான் பல்வேறு கலைகள்,

மனிதன் தன் எண்ணத்தை வெளியிட முற்பட்டான். அது இலக்கியமாயிற்று. கற்களைக் கண்டான். அது சிற்பமாயிற்று, கோடுகளையும் வண்ணங்களையும் கண்டான். அது ஓவியமாயிற்று. ஒலிகளைக்கேட்டான். அதைத்தானும்திருப்பிஎதிரொலித்தான். அது இசையாயிற்று. இப்படி ஆய கலைகள் அறுபத்து நான்கும் வளர்ந்தன.

மனிதன் கண்ட இந்தக் கலைகள் இயற்கையோடு தொடர்பு உடையவை. இயற்கையிலிருந்து பிரிக்கமுடியாதவை. தெய்வீகத்தன்மை உடையவை. இவைகளில் கட்டிடக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இசைக்கலை என்பன மிகவும் நுட்பமான கலைகளாகும். இந்தக்கலைகள் அனைத்தும் மனிதனுக்கு முதலில் மகிழ்ச்சியைத் தருவன. மற்றவர்களையும் மகிழ்விப்பன.

கலைகளில் கட்டிடக் கலைக்கு ஒரு தனிமதிப்பு உண்டு. கற்கால மனிதன் குகைகளில் வாழ்ந்ததாகப் படிக்கிறோம். மரப்பொந்துகளில் வாழ்ந்ததாக அறிகிறோம். அப்படி வாழ்ந்த மனிதன் படிப்படியாகத் தான்வாழும் இடத்தை வாழ வசதியுடையதாக மாற்றிக்கொண்டிருக்கிறான். அதன் ஓர் எல்லை தான் இன்றைய கட்டிடக்கலை வளர்ச்சி.

மண்ணாலும், செங்கற்களாலும், மரத்தாலும் கருங்கற்களாலும் இறைவன் உறையும் கோயில்களை அமைத்துப் பெருமை அடைந்திருக்கிறான். இந்தக் கட்டிடக் கலையின்

ஆதரவால்தான் சிற்பக்கலேயும், ஓவியக்கலேயும்வளரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிற கலேகளுடனும் கட்டிடக்கலேக்குத் தொடர்பு இருக்கிறது. மனிதனின் படைப்புக் கலேக்கு முதலில் மரங்கள் பயன்பட்டன. கருங்கற்கள் பயன்பட்டன. அதன் பின்னர் உலோகங்கள் பயன்பட்டன. இப்படி மரத்தாலும் கற்களாலும் உலோகங்களாலும் மனிதன் வடிவமைத்த சிற்பங்கள் பலவாகும். அந்தச் சிற்பங்கள் இயற்கையோடு தொடர்புடையவை. வரலாற்ரேடு தொடர்புடையவை. மக்கள் வாழ்வியலோடு தொடர்புடையவை. இவற்றிற்கும் மேலாக இறைவனேடு தொடர்புடையவை. பல்வேறுவிதமான வடிவங்களே, உணர்ச்சிகளே, நல்லதும் தீயதுமான செயல்களே மனிதன் சிற்பங்களாகப் படைத்திருக்கிற விதம் நினேந்துநினேந்து மகிழத்தக்கவை. காலத்தால் மறக்க முடியாதவை. தமிழ்நாட்டுத் திருக்கோயில்களும், பிறதெய்வ நிலேயங்களும் இக்கலேயின் உறைவிடங்கள் ஆகும். சிற்பக்கலே சமய, இனவேறுபாடுகளேக் கடந்தவை. நாட்டில் அமைதி நிலவிய போதெல்லாம் வளர்ந்தவை.

சிற்பக்கலேயின் பின்னணியில் வளர்ந்தது ஓவியக்கலே. மனிதன் என்று இயற்கைக் காட்சிகளேயும் இயற்கை வண்ணங்களேயும் கண்டானே! அன்றே உதயமானதுதான் ஓவியக்கலே. இந்தக்கலே கண்களுக்கும் மனிதனின் கருத்திற்கும் பெரு மகிழ்ச்சி தருவது. உலகியலில் ஓடிக்கொண்டிருக்கிற மனிதனே நிறுத்திச் சிந்திக்கவைப்பது. இந்தக் கலேயில் மனிதர்களில் எந்த வயதினரும், வகையினரும் ஈடுபாடுகொள்வார்கள்.

நம் தமிழ்நாட்டில் ஓவியக்கலே பழைய கலேகளில் ஒன்ருகும். தமிழ்மொழியிலுள்ள பழமையான இலக்கிய இலக்கண நூல்கள் யாவும் இக்கலேயைப் பற்றி விளக்கியுள்ளன. அவைகளேப் படிக்கும்போது ஓவியக் கலேயின் தொன்மையினேயும் படிப்படியான வளர்ச்சியினேயும் அறியலாம்.

தமிழ் இலக்கண நூல்களில் மிகவும் பழமையானது தொல்காப்பியமாகும். அந்தநூலில் நடுகற்களேப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. போரில் இறந்த வீரனுக்கு அவன் நினேவைப்போற்றும் வகையில் கருங்கல்லால் சிலே செதுக்குவதற்கு முன்னர், வீரனின் உருவம் ஓவியமாக வரையப்படும். என்றும், அந்தஓவிய வடிவத்தைக்கண்டபின்னர்தான் உருவம் செதுக்கப்படும் என்றும் தொல்காப்பியர் விளக்கி யுள்ளார். தமிழில் உள்ள எட்டுத்தொகை நூல்களில் ஒன்று அகநானூறு. அந்நூலில் ஓவியம் பற்றி செய்திகள் பல இடங்களிலும் பல

பாடல்களில் உவமைகளாகச் சொல்லப்பட்டுள்ளன. "ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி" எனவரும் தொடர், இந்தக் கலையின் பழமையினை உணர்த்துவதாகும்.

தமிழ் மொழியிலுள்ள பழம்பெரும் காப்பியங்களில் ஒன்று மணிமேகலை. அந்நூலில் கருத்துக்கலை பயில்பவர்கள் ஓவியக் கலையும் பயின்றார்கள் என்றும். நாட்டியக் கலையில் வல்லவளாகிய மாதவி ஓவியக் கலையிலும் மிகவும் வல்லவளாக இருந்தாள் என்றும் தெரிவிக்கின்றது.

சிலப்பதிகார ஆசிரியர் ஓவியக் கலையை விளக்கியுள்ள செய்திகள் மிகவும் அற்புதமானவை. அவர் ஓவியக் கலையை விளக்கும் "ஓவியச்செந்நூல்" ஒன்று இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஓவியம் எழுதுவோரை "ஓவியமாக்கள்" என்றும், "கண்ணுள் வினைஞர்" என்றும் குறிப்பிட்டுள்ளார். மாதவியின் நடனம் அரங்கேறிய இந்திரவிழா மண்டபம் முழுவதும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்றும். ஓவியங்கள் எழுதிய விதானத் துணிகள் கட்டப்பட்டிருந்தன என்றும் தெரிவித்துள்ளார்.

பாண்டியர்களில் ஒருவன் தலையாலங்கானம் என்ற இடத்தில் போரில் வெற்றி பெற்ற நெடுஞ்செழியன் என்பவன். அவன் தன் தலைவியைப் பிரிந்து வேறுநாடு சென்றிருந்தான். அப்பொழுது தலைவி அவனைப் பிரிந்திருந்தாள். அவள் இருந்த கட்டிலின் மேல் பகுதியில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்று நெடுநல்வாடை என்ற பத்துப்பாட்டு நூல்தெரிவிக்கின்றது.

பழங்காலத்தில் ஓவியங்களைத் துணிகளிலும் மரப்பலகைகளிலும் சுவர்களின் மீதும் வரைந்திருக்கின்றனர். நாளடைவில் இது வளர்ச்சியடைந்திருக்கிறது. அந்தக் காலத்தில் ஆடைகளில் ஓவியங்கள் எழுதி, அதைப் பெருமையாக உடுத்திக் கொண்ட பழக்கமும் இருந்தது என்பதை மணிமேகலையால் அறியமுடிகிறது. அந்த ஓவியங்களை எழுதிய ஓவியர்கள், வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினை, என்ற தொடரால் புகழப்படுதலை அறியலாம்.

அந்தக் காலத்தில்கட்டிடங்களில்ஓவியங்கள் வரையப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன. கோயில் சுவர்களில் தேவர்கள் மக்கள், பிற உயிர்கள் பற்றிய ஓவியங்கள்–அதுவும் கண்கவர் ஓவியங்களாக அக்காலத்தில் தீட்டப்பட்டுள்ளன.

அந்தக் காலத்தில் தான் விரும்பிய தலைவியை மணந்து கொள்ளமுடியாது இடையூறு ஏற்பட்டால் அவள் உருவத்தை ஓவியமாக எழுதித் தலைவன் மடலேறுவான் என்று அகப் பொருள் நூல்கள் கூறுகின்றன. திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன்கோயில் மண்டபங்களில் சூரியன் சந்திரன் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்று அறியமுடிகின்றது.

இப்படித்தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில்மிகவும்பழமை உடையதாகவுள்ள இந்த ஓவியக்கலை பிற நாடுகளிலும் வளரா மல் இல்லை. ஆனால் அவையெல்லாம் காலத்தால் பிந்தியவை. அஜந்தா எல்லோரா போன்ற இடங்களில் உள்ள வட இந்திய ஓவியங்கள் சிறப்புடையவை. கிரேக்கநாட்டு ஓவியங்கள் மிகச் சிறப்புடையவை என்று உலக வரலாற்று நூல்கள் தெரி விக்கின்றன,

இத்தகைய சிறப்புடைய ஓவியங்கள் மிகவும் பழங்காலத் தில் எவ்வாறு வரையப்பட்டன என்பதை அறிந்துகொள்வது நல்லது. பூமணல், சுண்ணும்பு, கடுக்காய் இவைகளை நன்ருக அரைத்துப் பலநாள் ஊறவைத்து, இதில் வெல்லத் தண்ணீர் அல்லது பனஞ்சாறு இவற்றில் ஒன்றைக்கலந்து மெழுகுபத மாக்கி, அதைக் கருங்கல் சுவரின்மீது ஒரு நெல் அளவு உயரம் மேடுபள்ளமில்லாமல் பூசுவார்கள். சமமாகப் பூசப்பட்ட அந்தச்சுவரின் ஈரம் காய்ந்துபோவதற்குமுன்பாகப் பச்சை மஞ்சள் கிழங்கைக்கொண்டு கோடுவடிவத்தில் உருவங்கள் வரைவார்கள், அப்பொழுது அந்தக்கோடுவடிவ ஓவியம் சிவந்தநிறமுடையதாக எடுப்பாகத் தோன்றும். சுண்ணும்பும் மஞ்சளும்கலந்தநிலையில் ஒரு புதியவண்ணம் தானே உருவாகி விடும். இதற்குப் புனையா ஓவியம் என்றுபெயர். இவை முழுவதும் வண்ணம் தீட்டப்படாத ஓவியமாகும்.

இவ்வாறு வரையப்பட்ட ஓவியங்களின்மீது பல பச்சிலை களின் சாறுகளைக்கொண்டு பல வண்ணங்களைத் தயாரித்து ஓவியங்கள்மீது தீட்டி அழகுசெய்வார்கள், இந்த ஓவியங்கள் மீது கூழாங்கற்களைவைத்துத் தேய்த்து மெருகுகொடுப்பார்கள். இப்படித்தான் அந்தக்கால ஓவியங்கள் வடிவம்பெற்றன, ஆனால் இந்த நாகரிகயுகத்தில் ஓவியக்கலை வளர்ந்துள்ள விதம் மிகவும் வியப்பிற்கு உரியவை.

பல்லவ மன்னர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் இந்த ஓவியக் கலையை வளர்த்திருக்கிருர்கள், அவர்கள் புதுக்கோட் டையை அடுத்த சித்தன்னவாசலிலும், மாமண்டூர், மகேந் திரவாடி போன்ற இடங்களிலும் வரைந்துள்ள ஓவியங்கள்

மிகவும் சிறப்புடையவை. சித்தன்னவாசலிலுள்ள நடனமாதர் ஒவியமும், அரசன் அரசி ஒவியமும், தாமரைக்குள ஒவியமும், அக்குளத்தில் சமய முனிவர்கள் மலர் பறிக்கும் காட்சியும் ஒவியக் கலையின் பழமையை உலகிற்கு அறிவிப்பவை.

இடைக்காலத்தில் பேரரசு செலுத்திய சோழ மன்னர்கள் தாங்கள் எடுத்த கோயில்களிலெல்லாம் இக்கலையை வளர்த்துப் போற்றியுள்ளார்கள். தஞ்சைப் பெருங்கோயிலிலும் திருநாகேசுவரம் ஆலயத்திலும் காணப்படும் சோழர்கால ஒவியங்கள் நம்மை மகிழச்செய்பவை. பாண்டியமன்னர்களும் மற்றகுறுநில மன்னர்களும் இக்கலையை ஆதரித்திருக்கிறார்கள்.

இப்படி வளர்ந்த ஒவியக்கலை நாளடைவில் புராண இதிகாசச்செய்திகளை மையமாகக்கொண்டு வளரத் தலைப்பட்டது. அங்கங்கே வாழ்ந்த ஒவியர்கள் பழைய புதிய கோயில்களிலும் பெரிய மாளிகைகளிலும் தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். உயர்ந்தநிலை ஒவியங்களும் மிகவும் சாதாரண நிலை ஒவியங்களும் அவர்களால் வரையப்பட்டிருக்கின்றன.

தற்காலத்தில் தண்ணீர்வண்ண ஒவியங்களும் எண்ணெய் வண்ண ஒவியங்களும் மிகவும் பலவாக வரையப்படுகின்றன. இத்தகைய வண்ணங்களை மிகவும் திறமையாகத் தயாரித்துத் தரும் நிலைக்கு நாகரிகம் வளர்ந்துள்ளது.

மனிதனின் மனவளர்ச்சி வளர்ந்துள்ள இந்தக் காலத்தில் ஒவியக்கலையும் மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளது. பழைய ஒவியங்களை மக்கள் மதிக்கிறார்கள். புதிய ஒவியங்களுக்கும் நல்ல ஆதரவு தருகிறார்கள். இயற்கைக் காட்சிகள் பற்றிய ஒவியங்கள் யாராலும் விரும்பி வரவேற்கப்படுகின்றன. நல்ல மலைக்காட்சி, அருவிக்காட்சி, சூரியஉதயம், விலங்குகளின் இயற்கை வாழ்வு, வண்ணவண்ண மலர்கள், பூத்துக்குலுங்கும் சோலை, பரந்துகிடக்கும் நீலக்கடல், அதிலேமிதக்கும் சிறுஓடம், தெய்வக்கலை நிரம்பிய இறைவனின் பல்வேறுவடிவஒவியங்கள், இவைகளைத் தற்காலமக்கள் மிகவும்விரும்புகிறார்கள். செயற்கை நிலையைவிட மக்கள் இயற்கை நிலைக்கே மிகவும் மதிப்புத் தருகிறார்கள்.

நாகரிக வாழ்வில் திளைக்கும் மக்களின் வீட்டுச்சுவர்கள், வீடுகளில் காணப்படும் திரைத் துணிகள், பெண்கள் உடுத்தும் ஆடைகள், பொது மன்றங்கள் எங்கும் இந்த ஒவியக்கலை புதிய பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது.

தற்காலத்தில் மாடர்ன் ஆர்ட் என்று அழைக்கப்படும் புதுமையான ஓவியங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளன. ஓவியத்தின் முழு வடிவும் தெரியாத நிலையில், ஆனால் ஊன்றிக் கவனித்தால் அவை புலப்படும் வகையில் இந்தப் புதிய ஓவியங்கள் குறைந்த முயற்சியில் வரையப்படுகின்றன. இந்த வகை ஓவியங்கள் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படக் கூடியனவே ஆகும்.

மக்களின் வாழ்வு ஓவியக்கலையோடு பிரிக்க இயலாதவாறு கலந்துள்ளது. அவர்கள் ஓவியங்களில் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றனர். பழைய புதிய ஓவியங்களுக்காகப் பெரும்பொருள் செலவிடுகின்றனர். தாங்கள் விரும்பும் ஓவியங்களைக்காணும் போதெல்லாம் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றனர். இப்படி மக்களின் மன மகிழ்ச்சிக்கு இன்ப வாழ்விற்கு உதவும் ஓவியக் கலையைத் தொடர்ந்து வளர்ப்பது நம் கடமையன்றோ ?

எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறு

திருத்தாண்டகம்

அத்தாவுன் அடியேனை அன்பாலார்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக்கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியையானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்றுகொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன்நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐயஐயோ
எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே.

— திருநாவுக்கரசர்.

விமானத்தைக் கண்டுபிடித்தது இந்தியனே

திரு. துரை. நமசிவாயம்

விமானத்தைக் கண்டுபிடித்தது யார்? 'ரைட் சகோதரர்கள் தான் ஏரோப்ளேனைக் கண்டுபிடித்தவர்கள். இதிலென்ன சந்தேகம் என்றே எல்லோரும் பதில் சொல்லுவார்கள். ஆனால் ரைட் சகோதரர்களுக்கு முன்பே நமது பம்பாயைச் சேர்ந்த ஒருவர் ஏரோப்ளேனைக்கண்டுபிடித்து தானே இயக்கியும் காண் பித்துள்ளார். அதுவும் பல்லாயிரக் கணக்கான மக்களின் முன்னிலையில் வானில் பறக்கவிட்டார் என்னும் செய்தி நம்மில் பலருக்கும் தெரியாது. 1895 ம் ஆண்டில் தான் அந்தச் சோதனை நடத்தப்பட்டது. நடத்தப்பட்ட இடம் பம்பாயில் உள்ள "சௌபாட்டி". கண்டுபிடித்தவர் பெயர் "உஷிவ்கர் ரப்புஜி தால்பேட" அவ்வாறு வானத்தில் நிகழ்த்திய அற்புதத்தை அங்கேயே நேரில் இருந்து வாழ்த்தியவர்களில் ஸ்ரீமகா தேவ கோவிந்தரானடே, நாராயணமூர்த்தி ரானடே, சயாஜிராவ் கெய்க்வாட் ஆகியோர் முக்கியமானவர்கள். பம்பாயில் உள்ள உயர்நிலைப்பள்ளி ஒன்றில் உஷிவ்கர் ரப்புஜி தாலபேட் வேலை பார்த்து வந்தார். சமஸ்கிருதத்தில்பாண்டியத்துவமும் விமர்சனம் மற்றும் ஆய்வுத்திறனும் பெற்ற அறிஞராக விளங்கினர். அவர் இரண்டு புத்தகங்களை எழுதினர். யோக சாஸ்திரகாபூதார்த் தரசன் "குரு மந்திரமகிமா" ஆகியவையே அந்த நூல்கள். அவரது மேதாவிலாசத்தை மெச்சிய துவாரகா சங்கராச்சாரியர்" "வித்யா பிரகாஷ் பிரதீப்" என்ற பட்டமளித்துக்கௌரவித்தார்.

மறுமலர்ச்சி :

தால்பேட் ஆரிய சமாஜத்தில் அங்கத்தினராகிச்சேவைகள் செய்துவந்தார். ஆரிய சமாஜம் என்ற இயக்கம் இந்துமத மூட நம்பிக்கைகளைத் தகர்த்திடப் பாடுபட்டது. அத்துடன் சமூக அரசியல் கலாச்சார விஷயங்களிலும் கவனம்செலுத்தி, இந்திய மக்களிடையே மறுமலர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் உண் டாக்கிக்கொண்டிருந்தது. அந்தத்தருனத்தில் தால்பேட் இந்திய கலாச்சாரத்தின் தன்மைகளைப் பத்திரிகை மூலம் எழுதிப் பரப்பி வந்தார்.

வேதகால இலக்கியங்களில் விற்பன்னராக விள்ங்கிய அவருக்கு ஒருவிஷயம் தெரிய வந்தது. ரிக்வேதத்தில் பத்தாவது மண்டலத்தில், பத்தொன்பதாவது ருச்சாவில் "விமானம்"

பற்றிய செய்தி விவரிக்கப்பட்டிருப்பதைப் படித்தார். அதில் பரத்வாஜ முனிவர் அந்த விமானம் பற்றிய விவரிப்புகளுக்கு எழுதிய விமர்சனத்தையும் படிக்க நேர்ந்தது. ஆனாலும் விபரங்களும் விமர்சனங்களும் முழுமையாக அவருக்குக் கிடைக்கவில்லை. அந்த அரைகுறைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டுமீதம் தேவைப்படும் செய்திகளை உத்தேசமாக உணர்ந்து சோதனைகளைத் துவக்கினர்.

சோதனைகளைத் துவக்கினரே தவிரப் பத்தொன்பதாவது நூற்றாண்டின் மூலப்பொருட்கள் பற்றாக் குறையைச்சரிகட்டி பரிசோதனைகளைத்தொடருவது அவ்வளவு சுலபமாக இல்லை. இருந்தாலும் இருக்கும் இடையூறுகளைத் தாண்டிச் செயலாற்றி வெற்றி காணமுடியும் என்று நம்பினர். பலதரப்பட்ட மரவகைகளும் சேகரிக்கப்பட்டன. அவைகள் அனைத்தும் பல வடிவங்களாக்கப்பட்டு மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டன. பெண்கள் வீட்டைவிட்டு வெளியில்வரக்கூடாது என்ற காலத்தில் இவரது மனைவி கணவனின் கண்டுபிடிப்பு முயற்சில் உதவியது ஒரு உயர்ந்த செயல். இவரது மனைவி மட்டுமல்லாமல் பம்பாய் பொதுப்பணித்துறையில் பணியாற்றி வந்த " பிட்கர் " என்பவரும் தொழில் நுணுக்க உதவிகள் செய்தார். ரிக் வேதத்தில் குறிப்பிட்டபடி எட்டு இயந்திரங்கள் கொண்ட எட்டு பகுதிகளாக வடிவமைக்கப் பட்டது. மெர்க்குரியை சூரியக்கதிர் வெளிச்சத்துடன் இணைப்பதன்மூலம் தேவையான வேகத்தைப் பெறமுடியும் என்ற பரத்வாஜரின் விளக்கத்தை ஏற்றுச் செயல் படுத்தினர். இந்த அடிப்படையில் வான ஊர்திக்கு வடிவம் கொடுத்தார். வேத காலத்திலிருந்து வந்த விமானம் என்று அவர் உருவாக்கியதைக் காணுவதற்குப் பலரும் அவருடையவீட்டின் முன் கூடினர்கள். பம்பாயிலுள்ள " டுக்கெர்வாடி " என்னுமிடத்தில் தால்பேட்டின் வீடு சிறியதாக இருந்தது. அந்தச்சிறிய வீட்டிலிருந்து விமானத்தை இயக்கிக் காட்டுவது அவருக்கு எளிதாக இல்லை. ஆதலால் பம்பாயில் டவுன்ஹாலில் பலரின் முன்னிலையிலும் பார்வைக்கு வைத்தார். பார்வைக்குவைத்தாரே தவிர பறக்க விடுவதற்கு முடியவில்லை. காரணம் ரிக்வேதமோ அதற்கு எழுதப்பட்ட பரத்துவாஜ முனிவரின் விளக்கமோ போதுமானதாக இல்லாததேயாகும். மேற்கொண்டு என்ன செய்வது என்று சிந்தித்து, சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். மெர்க்குரியின் அளவை அதிகமாக்குவதன் மூலம் வானத்தில் விமானத்தைப் பறக்கவிட முடியும் என்ற முடிவுக்கு வந்தார். ஆதலால் ஏற்கனவே அமைத்திருந்த மாதிரி விமானத்தைமாற்றி அமைத்தார். புதிய மாதிரியில் விமானம் உருவாக்கப்பட்டது.

மெர்க்குரியையும் சூரியசக்தியையும் இணைத்து இயக்குவதற்கு விமானம் தயாராக்கப்பட்டது. விமானத்தை "தால்பேட்" இயக்கினர். எட்டு இயந்திரங்களும் இயங்கின. விமானம் தரையில் ஊர்ந்து வானத்தில் பறக்கத் துவங்கியது. 1500 அடி உயரம் வரை சென்றது. பின்னர்த்தரையை நோக்கி மெதுவாகவும் சரியாகவும் வந்து இறங்கியது. இந்த நிகழ்ச்சியைப்பல்லாயிரக்கணக்கானவர்கள் பார்த்தனர். விமானக் கண்டுபிடிப்பில் இந்த இந்தியப் பரிசோதனை ஒரு சோதனையே. நூறு சதவீதம் வெற்றியை விளைவித்தது. தால்பேட்டின் விஞ்ஞான முயற்சிக்கு வெற்றி கிடைத்தது. ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் என்று இதுவரையில் நாம் சொல்லி வந்ததை சரிதானாஎன்று ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"தால்பேட்" என்ற இந்தியரின் விமானக் கண்டுபிடிப்பு முயற்சியை மராத்திமொழி நூலிலிருந்து எடுத்து "மிர்ரர்" ஆங்கிலத்தில் வெளியிட்ட ஒருகட்டுரையை அப்படியே தமிழில் தந்திருக்கிறேன். ஆதலால் விமானத்தைக் கண்டுபிடித்த இந்தியனை உலகிற்கு உணர்த்துவோம்.

நன்றி.

— தினமலர் பக்கம் 7. 29—11—83.

ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்துமுனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் முதல்வருமான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் திருப்பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில்தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் மாத இதழாகவெளிவருகிறது.

ஆயுட்சந்தா	(உள்நாடு)	... ரூ.	100—00
,,	(வெளிநாடு)	... ரூ.	125—00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)	... ரூ.	7—50
,,	(ஸ்ரீலங்கா)	... ரூ.	10—00
,,	(வெளிநாடு)	... ரூ.	12—00

நிர்வாக ஆசிரியர் :- ஸ்ரீ குமரகுருபரர்
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள் 612504.
தஞ்சை மாவட்டம்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருட்பணிகள்

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,
தமிழ்ப்பேராசிரியை,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

கயிலைக்குருமணிக்கு அஞ்சலி

இருமைப் பயனும் இனிதே நுகரத்
தருமை ஒளியே தனியே கிளையே
பெருமை யளித்துப் பிழைகள் பொறுத்த
அருமை யுடையாய் அருளை நினைவேன் !

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வணக்கம்

காசியிலே விதிமுடிய கண்களிலே நதிபடிய
நீதியிலே நாம்விடிய நேர்மை முடிசூடியதே.

ஈயறியாப் பூந்தேனே எறும்பறியா நறுஞ்சுவையே
வாயறியாப் பூம்பண்ணே பதமறியாத் தவநிலையே

சத்தியத்தின் வாசலிது தமிழ்வளரும் வாசலிது
சித்தமதில் சிவம்மணக்கும் சிவஞான வாசலிது.

பெற்றது கொண்டு பிழைசெய் தாலும்
வெற்றடி யாரென வெறுத்திடல் வேண்டா
தள்ளினும் உள்ளும் தமிழ்நெஞ் சுடனே
தலையைத் தாளில் தாழ்த்திவைத் தேனே.

அரங்கத் தலைவர் ஆசான் * சொ. சி. அவர்களுக்கு

என் உத்திரவுகளை மீறி
உணர்ச்சி இங்கே பேசுகிறது;
அசைந்து வந்தாலும் தேருக்கு
அடிக்கட்டை வேண்டாமா
அப்படித்தான் என் ஆசான்
தெய்வத்தைக் காட்டி
ஊக்கத்தை ஊட்டி
உயருதற்கு வழிசொன்னார்.

---

* கவியரங்கத்தலைவர் Dr. சொ சிங்காரவேலன் M.A., Ph.D.

ஆம்! ஆயிரம் வெண்பொன் தான்பெற்றூர்
அடுத்து என்னை ஆட்படுத்தி
தமிழ்த் தொண்டு செய்யும் ஆதீனத்தில்
தமிழ்த் தொண்டு செய்க என்றூர்.

இலக்கணங்கள் அறையானாலும்
இலக்கணக் கல்லறையானாலும்
துணைக்குத் தமிழுண்டு;
தூய நெஞ்சுண்டு:
அணைக்கக் கரமுண்டு;
ஆசிகூற நாவுண்டு;
அப்படிப்பட்ட
நல்லாசானுக்கு நான்கூறும் வணக்கம்
வணக்க முடையதே!

நிகழ்நிலை

‡ காசில்லா நேரத்தில் விருந்து வந்தால்
கண்ணாலே எரித்திடுவாள் மனையின் தெய்வம்;
மாசில்லா நல்வாய்ப்பு என்று நீர்தான்
மனம்மகிழச் சொன்னாலும் ஏற்க மாட்டேன்;
நேசமுடை நெஞ்சில்லை கவிதை பாட
நினைவுதெரிந்த நாள்முதலாய்ப் பழக்க மில்லை
பூசாத அரிதார வேடம் போடப்
பொதுஇடமா! ஆதீனம் ஆசான் உண்டே!

நிகழ்ந்தநிலை

ஞானசம்பந் தம்வந்த வுடன்என் வீட்டில்
நான்முந்தி நீமுந்தி என்றுதம்பி பிள்ளைகள்
ஞானசம்பந் தம்இல்லா மல்சண் டையிட
நானெடுப்பேன் விரைவாக நல்வாக்குப் பார்த்திடவே
போனபுதனன்று போயெடுத்துப் பார்த்த போது
புதிதான சேலைவரும்; புத்திகொஞ்சம் செலவாகும்;
ஆனாலும் சனியன்று அகப்பட்டு நீர்விழிப்பீர்
அடுத்தநாள் தேர்வுண்டு அதிலொன்று மாற்றமில்லை

என்றிருந்த வாரபலன் என்னைப் பயமுறுத்த
கொண்டுவந்து தந்தான் குருபூஜைப் பத்திரிகை
நான்செய்த பாவத்தை நீங்கள் அனுபவிக்க
நல்லதொரு சந்தர்ப்பம் நானென்ன செய்யட்டும்

‡ Gas.

வேண்டி விதைவிதைத்து விளைந்த கதிறுக்க
விருப்ப மில்லைஎன்றால் விட்டிடுமோ விதிதானும்
தூண்டிலில் மீன்துடிக்க துள்ளும்புழு காரணமாம்
துவங்குகிறேன் கவிதைதனைத் துவளாமல்கேட்டிடுவீர்.

திரும்பிய பக்கமெலாம் தித்திக்கும் தீங்கவிதைத்
தரவல்ல இளையோர்கள் சூழ்ந்திருக்க என்மனதில்
அரும்பிய அச்சமிது ஆதீனம் அருகிருக்க
அருட்பணிகள் பாடுவதா அதற்குளே என்சிவன்
விரும்பிய படிமோட்சம் விண்ணகத்தில் பெற்றுவிடும்
வீதியிலே சிலைவேண்டாம் விடுப்பொருநாள் மாண
தந்திடுவர் நிச்சயமாய் தடையில்லை; பின்னென்ன; [வர்க்கு
தமிழும் பிழைத்துவிடும் தரித்திரமும் ஒடிவிடும்.

புகழ்நிலை

வாராதுவந்த மாமணியாம் குரு மணியை
வாழ்த்தும் வகையேது வாழும்வகை தந்தார்
பேராதுநின்ற பெருங்கருணைப்பே ராற்றைப்
பெய்திடுவேன் வாயிலெனப் பேசிடுமாம் சிற்றெறும்பு
சாராது நின்று சார்ந்தார்க்கு அருள்செய்யும்
சீராளர் சிற்றம் பலப்பிறப் பாளர்
பாராத தலமில்லை; பரிந்தாடாத் தீர்த்தமிலை ;
போற்றாத மூர்த்தியில்லை; பண்ணினது புண்ணியமே!

பால்போன்ற உள்ளத்தார்; பகல்வென்ற எண்ணத்தார்;
நூல்தோய்ந்த நுண்ணறிவார் நுட்பமான நகையுணர்வார்;
வேல்கொண்ட செந்தூரான் கால்பற்றிய நம்பிக்கை
நால்கொண்ட விரல்நிமிர்ந்து அவர்புகழைக் காட்டும்கை.

அன்பை மறுக்கும் தாயுண்டு! ஆனை மறுக்கும் கரும்புண்டு!
என்பை உருக்கும் இவர் அன்பில்! இணையார் இங்கேயாருண்டு?

தவத்திற்கு ஒருதலைவர் அவரே தந்தார்!
தமிழுக்கு ஒருமுனைவர் அவரே தந்தார்!
அமிழ்தான ஒருசீடர் அவரே தந்தார்!
அறம்பேணும் நம்முதல்வர் அவரே தந்தார்!

(ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம்-முனைவர் சொ.சி.-ஸ்ரீலஸ்ரீகாசிவாசி ஜமான் சுவாமிகள்-கல்லூரி முதல்வர் திரு. வி. சா. கு.)

போற்றுநிலை

வனதுர்க்கை கோட்டம் கண்டு வழிபட்ட பெரிய உள்ளம்
தனதுகை யென்ற ஆட்கள் தளர்பசி வாட்டம் கண்டால்
மனதிற்குப் பிடித்த காபி (உப்பு)மாவு புளிசாதம் மிட்டாய்
கனவடை கடலை காரில் கடுகிவந்து பசியை ஓட்டும்.

வேலைசெயும் ஆட்களையே நெருங்கிச் சென்று
    வயிறார உண்டீரோ என்று கேட்டால்
நாளையென்றா வேலைநிற்கும் நல்லஅன்புப் பேச்சு
    நயமான பார்வைகொடை நல்லதுணை ஆச்சு
குடமுழுக்கு வைத்துவீட்டுக் கூறைவேட்டிக் கொடுப்பார்
    குறிப்பிட்ட நாளில்வந்து மூக்கில் விரல் வைப்பார்
திடமாகத் தாம்வளர்த்த வைராக்ய பக்தி
    தவராச சிங்கமாகக் காப்பதவர் சக்தி.

வருடத்திற்கு ஒருமுறைதான் பொங்கலென்றால்
    வந்திடுமே தீபாவளி நினைத்த போத
நடமாடும் குடிசனத்திற் கெண்ணெய் சோறு
    நல்கிஏழை இன்முகத்தில் இறையைக் காண்பார்
வடநாட்டு நாதனுக்கு விழா எடுத்து
    வாய்ச்சுவையும் செவிச்சுவையும் அருந்த வைப்பார்
கொடைமுரசு ஒலிக்கவிழா கொற்ற வைக்கு,
    கொற்றம் கொண்ட சதயவிழா அப்பர் ஆசி.

மக்கட்பணி மகிழ்ந்து செய்தார்
மக்கள் பணி மகிழ்ந்து செய்தார்
தக்கா ரிவர் என்றே சொன்னார்
தக்கார் இவர் என்றே சொன்னார்

உய்யும்நெறி காட்ட வந்தார்
உயர்ந்தநெறி காட்டிச் சென்றார்
செய்தவத்தால் இங்கே வந்தார்
செய்தவத்தால் அங்கே சென்றார்

நிறைவுறுநிலை

பாடத்தான் வந்தேன் ஆனால் பண்ணொன்றும் கூடவில்லை
படைக்கத்தான் வந்தேன் ஆனால் பண்டமொன்றும் சேரவில்லை
தேடத்தான் வந்தேன் இங்கே தேடிய பொருளே வந்து
கூடத்தான் மகிழ்ந்தேன் உள்ளம் கூறிடு கின்றேன் கேட்பீர்.

அள்ளிமுடித்த சின்னக் குடுமி அலர்ந்து செஞ்சடை யானதே!
கிள்ளியெடுத்த சிவந்த மேனி சிறிதாய்க் கருமை கொண்டதே!
பள்ளிசெல்லும் பாலன் உள்ளம் பரிந்துபொறுப்புகொண்டதே!
புள்ளிவைத்த கோலம் இங்கே புனிதனாகித் திகழ்ந்ததே!

வணக்கம்.

தானம், தனம், வேள்வி

டாக்டர். திரு. மு. அறம்

துணைவேந்தர், கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.

வினோபா பாவே அவர்களை முதல் முறையாக நான் சந்தித்தது நன்றாக நினைவில் இருக்கிறது. 1955 ஆம் ஆண்டில், அதாவது 28 ஆண்டுகளுக்கு முன்னால், ஒரிசா மாநிலத்தில் பூரி நகரத்தில் அவரைப் பார்த்தேன். அனைத்திந்திய சர்வோதய மாநாடு அங்கு நடைபெற்றது. நான் அப்பொழுதுதான் அமெரிக்காவில் நான்கு ஆண்டுகள் இருந்துவிட்டு தாயகம் திரும்பியிருந்தேன்.

வினோபாஜியுடன் சேர்ந்து பாதயாத்திரையில் கலந்து கொண்டது மறக்கமுடியாத அனுபவமாக இருந்தது. ஒரிசா கிராமங்களின் வறுமையைக் கண்டு வருந்தினேன். அதே சமயத்தில் " கொனாரக் " போன்ற கலைக் கோயில்களைக் கண்டு வியந்தேன்.

வினோபாஜி என்னை அழைத்தார். கோவை ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் உள்ள, ஆசிரியர் கல்லூரியில் நான் பேராசிரியராகப் பணியாற்றுகிறேன் என்று அறிமுகம் செய்தார்கள்.

" நீங்கள் என்ன பாடம் கற்பிக்கிறீர்கள் ", என்று வினோபா கேட்டார்.

" உளவியல், சமுகவியல் " என்று சொன்னேன்.

" உளவியல், சமுகவியல்– இவைதான் பூமிதானம்! " என்று வினோபா கூறி ' கொல் ' லென்று சிரித்தார்.

பின்னர் அவர் விளக்கினார்: " அறிவியல், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் நாம் மேல்நாட்டிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிரம்ப உள்ளது. ஆனால் உளவியல், சமுகவியல் துறைகளில் அவர்கள் நம்மிடமிருந்து நிரம்பக் கற்றுக்கொள்ளலாம் என்றார்.

வினோபா மேலும் விளக்கிச் சொன்னார்: " நாம் பிறக்கும் பொழுது மூன்று அமைப்புகள் நம்மைச் சூழ்கின்றன. அவை:– 1. உடம்பு 2. சமுதாயம் 3. இயற்கை. ஒவ்வொருநாளும்

குறிப்பு :– திருச்சி வானொலியில் ஒலிபரப்பினது. அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

இம்மூன்றையும் நாம் பயன்படுத்துகின்றோம். அதனால் ஏற்படும் இழப்பிற்கு நாம் ஈடுகட்டவேண்டும். சமுதாயத்திலிருந்து நாம் எடுக்கிறோம். அதற்கு ஈடுசெய்ய நாம் கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுப்பதுதானம். சமுதாயம்சிறப்பாகச்செயல்படத் தானம் அவசியம்.

சமுதாயத்தில் சிலர் செல்வம் சேர்க்கிறார்கள். சிலர் வறுமையில் வாழ்கிறார்கள். இதனால் ஏற்றத்தாழ்வு உண்டாகிறது. ஏற்றத்தாழ்வுபோகத் தானம் தேவை. செல்வம் உடையவர்கள் தாராளமாகத் தானம் செய்யவேண்டும்.

தானம் என்பது பிச்சை கொடுப்பது அல்ல. தானத்தின் பொருள் சமபங்கீடு என்று வினோபா கூறுகிறார்.

சமுதாயத்தில் பங்கீடு நியாயமாக இல்லாவிட்டால் வெறுப்பு வன்முறை உண்டாகும். சண்டை சச்சரவு பெருகும். தானத்தின் மூலம் சமத்துவம் சமுதாயத்தில் ஏற்பட்டால் அமைதி, இன்பம் உண்டாகும்.

வினோபா புதிதாகக் கண்டுபிடித்தது பூமிதான இயக்கம். 1951 – ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்திலுள்ள போச்சம்பள்ளியில் தொடங்கியது. நிலமுடைய ஒருவர் 100 ஏக்கர் நிலமில்லாதவர்களுக்காகத் தானம்கொடுத்தார். இந்தச் சிறு துளி பெருவெள்ளமாகப் பெருகி நம் நாடு முழுவதும் பரவியது. மொத்தம் சுமார் 42 லட்சம் ஏக்கர் நிலம் கிடைத்தது. இது சிறிய சாதனை அல்ல.

பூமிதானம் சிரமதானமாக மலர்ந்தது. ஒரு கிராமத்திலுள்ள 75சதவிகித நிலமுடையவர்கள் 50சதவிகித நிலத்தைப் பூமிதானமாகக் கொடுத்து விட்டால் அதனைக் கிராமதானம் என்று சொல்லலாம். இவ்வாறு நம்நாட்டில் 36, 000 க்கும் மேற்பட்ட கிராமதானங்கள் கொடுக்கப்பட்டன.

தானம் வெறும் கொடை அல்ல. சமூகப் புரட்சியின் கருவி ஆகும். பூமிதானம், கிராமதானம் தவிர, செல்வதானம், அறிவு தானம், உழைப்புதானம், உயிர்தானம் போன்ற பல இயக்கங்கள் சர்வோதய இயக்கத்தில் தோன்றியுள்ளன.

தானத்தைப்போன்ற இன்னொரு கருத்து தவம் ஆகும்.

“ தானம் தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின். ”

என்பது திருக்குறள்.

தானமும் தவமும் சமுதாயத்திற்கு முக்கியமானவை என்பதை வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உடம்பிலும் எழுச்சி வீழ்ச்சி உண்டு. மனிதமனத்திலும் எழுச்சி வீழ்ச்சி உண்டு. உடம்பு தூய்மையாக இருக்க வேண்டும். உள்ளமும் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மைபெற முயற்சிவேண்டும். சாதனேவேண்டும். இதனேயே தவம் என்று சொல்கிறோம். தனிமனிதன் வளரத் தவம் மிகவும் தேவை. வாழ்க்கையின் முக்கிய கடமை தவம் செய்வதுதான். அதனேயே வள்ளுவர் சொன்னர்: " தவம் செய்வார் தங்கருமம் செய்வார் " என்று.

சமதர்மப் பாதையில் உறுதியாகச் செல்வதே தவம் ஆகும். தவம் செய்வோர் உடம்பில், உள்ளத்தில் அமைதி, சமநிலே உண்டாகும்.

தானத்தின்மூலம் சமுதாயத்தில் சமநிலே உண்டாவதுபோல தவத்தின்மூலம் மனித உடம்பு – உள்ளத்தில் சமநிலே உண்டாவதுபோல, வேள்வியின் மூலம் இயற்கை அமைப்பில் சமத்துவம் உண்டாகும்.

தினமும்நாம் இயற்கையைப் பயன்படுத்துகிறோம். மரத்தை வெட்டுகிறோம். நிலத்தை உழுகிறோம். நாம்மரத்தை வைக்கவும் வேண்டும். நிலத்திற்கு உரம் தரவும்வேண்டும். எடுப்பதுபோல கொடுக்கவும் வேண்டும். இதனே விளேபா வேள்வி என்று கூறுகிருர்.

இன்று உலகில் சுற்றுப்புறம் கெட்டுவருகின்றது. சூழ்நிலே சிதைந்துவருகிறது என்று பெரிதும் பேசப்படுகின்றது. அழிப்பதைப்போல ஆக்கப்பணியும் செய்தால் இயற்கையில் சமநிலே உண்டாகும்.

தானம், தவம், வேள்வி இவை மூன்றும் நம்நாட்டில் தோன்றியுள்ள மூன்று முக்கிய கருத்துக்கள் என்பது விளேபா பாவின் சிந்தனே,

நன்றி. 1—11—83.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(ருத்ரோத்காரி௵ தை௴ 1௳ முதல் 29௳ முடிய)

(15—1—1984 முதல் 12—2—1984 முடிய)

		ரா சந்	
	இராசி		
சூ			ல/
கு பு	கே சு	சனி செ	

சனி	சந்	பு கு	ரா
	அம்ஸம்		
சூ சு			
கே	செ		ல /

ஸ்ரீருத்ரோத்காரி௵ மார்கழி௴ 30௳ ஸ்திரவாரம் உ ரோகிணி நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 38 நாழிகை 54 விநாடிக்கு பூர்வராத்திரியில் சிம்ம லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு தனுர்ராசியிலிருந்து மகரராசி சங்கிரமணமாகத் தைமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். மறுதினம் பானுவாரம் தைமாதம் முதல் தேதி உத்ராயண புண்ணிய காலமாகும். நீரஸாதிபதி சனிபகவான் ஆகிறார். சங்கிரமண தேவதை இராட்சசி சுத்ததீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தோல் வஸ்திரம் உடுத்தி வெள்ளி ஆபரணம் பூண்டு சித்திரான்னம் உண்டு கோழிவாகனமேறி ரவிப்பியம் குடை பிடித்து நீல சாமரம் விசப்பெற்று சந்தன தூபங்கமழ குனிந்த முகத்துடன் மகரபேரி வாத்தியம் முழங்க தெற்கு முகமாக வீற்றிருந்து வடகிழக்குத் திசையாகப் பயணம் செய்கிறாள்.

அதனுல் இரும்பு, ஈயம், நீலமணி இவற்றின் பலன் மிகும். அவற்றில் தொழில் விருத்தியும் ஆகும். தங்கம், வெள்ளி, சந்தனம், கற்பூரம் இவற்றின் விலை அதிகரிக்கும். முதல் வருணத்தார், பெண்கள், சாதுக்களுக்கு இன்னல் சம்பவிக்கும். அதர்மக்காரர்களின் எழுச்சி ஏற்படினும் சங்கிரமணகால கிரகஸ்திதியினுல் ஈசுவர செயலில் அதற்குச் சிஷ்டபரிபாலனம் ஆகும். உலககில் தர்மம் நீடிக்கும். சர்வேஸ்வரன் கிருபையில் உலகநாடுகளில் ஆளுனர்கள், மன்னர்கள், பிரஜா நலம்பேணி சமதர்மமாக மனுநீதி செலுத்துவர். ஆன்ருேர்களின் சிவதர்ம கைங்கர்யங்கள் தீர்க்கதரிசிகளின் லோகோபகார அருளுபதேசம் தெய்வ புண்ணியச் செயல்களின் பிரதிபலனுக சுபிட்சம் ஏற்படும். இவ்வுலகில்

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பூர்வ ஞானத் தொடர்ச்சியில் உயர்ந்துவந்து சிவராஜயோகத்தில் வீற்றிருக்கின்ற சிவஞானகுருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் லோகமாந்தர்களுக்கு சிவாசாரநன்னெறி போதித்தும், அவ்வழி பற்றுவதினின்றும் ஏற்படுகின்ற மனத்தூய்மை, நல்லாற்றல், திருவருள்பாக்கியம் ஆகிய உயர்விஷயங்களைத் தம் திருவாய் மலர்ந்து அருளி, சிஷ்ய கோடியானவர்கள் எல்லோரும் அவ்வழி அனுஷ்டித்து உயரவும் ஆசி அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சிறப்பொடு பூசனைகள் நடந்து கொண்டிருக்கும். மாந்தர்கள் தேவாலயம் சென்று தெய்வ தரிசனம் செய்து ஆனந்தமடைவர். நல்வழியில் பொருளீட்டி தானதர்ம சீலர்களாகச் சிறந்த வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபமானபலனைத் தரும். நிறைந்த தனம் தானியம் உண்டாகும். பூஷணங்களின் பிராப்தியை யளிக்கும். எல்லா காரியங்களையும் இராஜகண்யமாக நடத்திக் கொண்டிருக்கும். பத்திர விகிதங்களில் நல்லன ஏற்படும். வாகனசுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஜனவரி 16, 17, 18, 23, 24, 25, 26 பிப்ரவரி 1, 2, 3, 4, 5, 8, 9, 10 தேதிகளில் தனுதாயம் தரும். பிரசித்தம் பேரவைகளில் தலைமை தாங்குல் ஆகும். ஜனவரி 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$
(இ ஊ. ஏ. - ஒ. வ. வி. வு. - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும், வித்துவத்துவம் கலைத்துறைகளில் நன்மதிப்பும் ஆதாயமும் தரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பிரவிருத்திகளில் எல்லா காரியங்களிலும் ஜெயம்தரும். ஜனவரி 15, 18, 19, 20, 25. 26. 27, 28, பிப்ரவரி 3, 4, 5, 6, 7, 10, 11, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும், ஜனவரி 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$
(கா. கி. - கு. க. ஙை. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல தனவருமானம் வந்துகொண்டிருக்கும், வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் அரசாங்க லிகிதவிஷயங்களில் பிப்ரவரி 6உ க்கு நல்லன உருவாகும். வீடு வாகனங்களில் புதிய அமைப்பினை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும் ஜனவரி 16, 17, 18. 27. 28, 29, 30, பிப்ரவரி 6, 7, 8 9, 10 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும் பிப்ரவரி 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானங்களில் வரவாகிக்கொண்டிருக்கும், முன்புவரவேண்டிய பொருள் அல்லது விட்டிருந்த பூர்வசொத்தின் பிராப்தி ஒன்று கைகூடும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ்தரும். கட்டிடம் வாகனங்களில் சீர்திருத்தம் ஆகும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன்தரும். ஜனவரி 15, 19, 20, 23, 24, 29, 30, 31, பிப்ரவரி 1, 2, 8, 9, 10, 11, 12 தேதிகளில் தனதாயம். நற்செய்திவருதல், ஜெயம், நல்லகாரியங்களை நடத்துதல் ஊக்கமிகுதி ஆகிய நற்பலன்கள் ஆகும். பிப்ரவரி 3, 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். ஓய்வின்மை ஆயாசம் தோன்றும். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் கணிசமாகவந்துகொண்டிருக் கும். பிப்ரவரி முதலில் ஓர் அதிருஷ்டம்வரும். மனோதிடமாக எல்லாகாரியங்களையும் நடத்தும். வீடு வாகனங்களில் நல்ல ஏற்பாடு நடக்கும். தாரசௌக்கியம் புதல்வர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 16, 17, 18, 21, 22, 25, 26, பிப்ரவரி 1, 2, 3, 4. 5, 10, 11, 12 தேதிகளில் தனதாயம், காரிய ஜெயம், ஆரோக்கியம், நற்செய்திவருதல், கௌரவஸ்திதி ஆகிய நற்பலன் ஏற்படும், பிப்ரவரி 6, 7, தேதிகள் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் நடக்கும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வரும். அவசிய செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். நேர்மை உறுதிப்பாடுகளை வற்புறுத்துவதில் சமுகத்தினர் மனக்கசப்புறுவர். பின் உணர்ந்துவருவர். வீடு வாகனங்களில் நல்ல ஏற்பாடு நடக்கும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய வயிற்றில் அழற்சிபோன்ற நலிவு நீங்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் ஏற்படும். ஜனவரி 16, 17, 18, 19, 20, 23, 24, 27, 28 பிப்ரவரி 3, 4, 5, 6, 7 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம்:- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தன வருமானம் வந்துகொண்டிருக்கும். நல்ல பூஷணம் தரும். பிப்ரவரி முதல்தேதி ஒப்பந்த லேவா தேவிகளில் நல்லன வந்து சேரும். அரசாங்கத்திலிருந்து நல்விஷய லிகிதம்வரும். வீடு வாகனங்களில் நவீனம் பொருந்தும். எல்லா காரியங்களும் இஷ்டசித்தியாக நடந்துவரும். ஜனவரி 18, 19, 20, 21, 22, 25 26, 29, 30, 31 பிப்ரவரி 1, 6, 7, 8. 9 தேதிகளில் தனதாயாதி நற் பலன்களை யளிக்கும். ஜனவரி 15 பிப்ரவரி 10, 11, 12 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். நல்ல தனவருமானம் வரும். சகோதரர் முன்னேற்ற ஸ்திதியில் இருப்பர். பணியாளர் ஏவலர்களுக்கு உதவுதல்பரோபகாரம் செய்தல் இவற்றில் அதிகபொருள் செலவிடுதல் ஆகும். எல்லா காரியங்களையும் சமயோசித புத்தியால் செயல்படுத்துதல் ஆகும். அரசாங்க நன்மைகள் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 15, 21, 22, 23, 24 27, 28 பிப்ரவரி 1, 2, 8, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 16, 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். சுப விசேஷ செலவினங்களும் ஏற்படும். பிப்ரவரி 3 தேதி ஆனால் வித்தியா வியாபாராதி கலைத் துறையில் உத்தியோகத்தில் நற்பலன் தரும். நல்ல பதவிகள் ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜனவரி 15, 16, 17, 25, 26, 29, 30, 31 பிப்ரவரி 3, 4, 5, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஜனவரி 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. கா. கி -)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கெடியானதோரணைக்கு ஏற்பவரும். பொதுநலமாக தர்மகாரியங்களை ஏற்று நடத்தும். ஸ்திரிவழிநலங்களில் முன்னேற்றத்தில் ஈடுபாடு ஆகும், புத்திரர் பௌத்திரர்களின், சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 16, 17, 18, 19, 20, 25, 26, 27. 28, பிப்ரவரி 1, 2, 6, 7 தேதிகளில் தனுதாயம் சந்துஷ்டி, நற்சம்பவங்கள் ஏற்படும். ஜனவரி 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸ௱. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும், குடும்ப அபிவிருத்தியில் நல்ல தனவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் பிரபலஸ்திதியாகும். கால்நடை வாகனப் பிராப்தியில் ஜனவரி 21 உக்கு நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும் ஜனவரி 19, 20, 21, 22, 27, 28, 29, 30, 31 பிப்ரவரி 3, 4, 5, 8, 9, 10 தேதிகளில் தனதாயம் பிரபலம் மனஉற்சாகம்தரும். ஜனவரி 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம் மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீன ராசி 9 பாதங்களும் நற்பலன்களாக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் தன லாபங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். இராசிக்கு ஓர் விபத்துவந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நற்பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தார சௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 15, 21, 22, 23, 24, 29, 30, 31, பிப்ரவரி 1, 2, 6, 7, 11, 12 தேதிகளில் தனதாயாதிநற்பலன்களையளிக்கும். ஜனவரி 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

இறைவன் எழுதிக்காட்டொணாதவன்

திருத்தாண்டகம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன்ஓ ருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே.

— திருநாவுக்கரசர்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் சிறப்பு வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திரத் திருநாளை முன்னிட்டுத் திருமுருகன்பூண்டி, அவிநாசி ஆகிய கொங்குநாட்டுத் தலங்களில் 23—12—83 வெள்ளிக்கிழமையன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

கோவை ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றத்தினர், அவிநாசி ஆரூரர் வாரவழிபாட்டுக் கழகத்தினர், சுவர்ணாம்பிகா சைவசித்தாந்த சபையினர் ஆகியோர் வழிபாட்டைச்சிறப்புறச் செய்விக்கவுதவினர்.

ஆதீனச் சார்பிலும் பக்தர்கள் சார்பிலும் சுவாமி அம்பாள் மற்றும் சிறப்புடைய மூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

காலையில் திருமுருகன்பூண்டியிலும், உச்சிக்காலத்தில் அவிநாசியிலும் வழிபாடுகள் நிகழ்ந்தன,

அவிநாசியில் மாலை 6 மணிமுதல் சமய விரிவுரைக்கூட்டம் நிகழ்ந்தது.

திரு. இராம. ஏகப்பன் அவர்கள் வரவேற்புரை கூறினார். திரு. கந்தசாமிக் கவுண்டர் அவர்கள் தலைமையில் சமயவிரிவுரைகள் நிகழ்ந்தன. திரு. பழ. பழநியப்பன், திரு. சண்முகம், திரு. சம்பத்குமார், திரு. இராவணதாசன், திரு. தெய்வசிகாமணி, திரு. சிவா, திரு. முருகநாதன் செட்டியார், செல்வன். பால சிவகுமார். திரு. தேவராசன். திரு. சி. க. மணியம். திரு. மு. நடராச தேசிகர் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரைகள் நிகழ்த்தினர்.

திரு. தக்ஷிணாமூர்த்தி ஓதுவார், திரு. சுப்பையா ஓதுவார் ஆகியோர் திருமுறை ஓதினர். தலப்பதிக வெளியீடு வழங்கப் பட்டது.

(88 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாவிரதியாக வந்த பெருமானும் கஞ்சாறர் பெருமையை உலகுக்கு உணர்த்தி மறைந்தார். மணமகனுராகிய கலிக்காம ருக்கும் இறைவன் அருள் செய்தார். கூந்தல் வளரப்பெற்று மணம் செய்து கொண்டார்.

இவ்வாறு கஞ்சாறர் வரலாற்றைத் தத்துவச் செறிவோடு உணர்த்தி அரிவாள் தாயபற்றித் தொடர்ந்து உபதேசித் தார்கள். அரிவாள் தாயர் திருத்துறைப்பூண்டிக்கு அண்மையில் உள்ள தண்டலை நீள்நெறிக்கு அருகே கணமங்கலத்தில் அவ தரித்தவர். தாம்பெற்ற செல்வத்தை இறைவனுக்கு என்று வைத்தவர். தம் நிலத்தில் விளைந்த கார் நெல்லைத் தமக்கு உண வாகக் கொண்டார். செந்நெல்லை இறைவனுக்கு எனவைத்தார்

வறியராகிய போதும் சிவனுக்குச் செந்நெல் உணவும், கீரையும் மாவடுவும் அளித்தார் தாயநாயனுர்.

செந்நெல்லும், செங்கீரையும் சத்துள்ள நல்ல உணவு. மாவடு – ஜீரணசக்திக்கு உதவக் கூடியது என இவ்வுணவின் தன்மையைக் குருமணிகள்சுட்டினுர்கள். குறிக்கோள்பிறழாமல் வாழ்ந்தநாளில் ஒருநாள்! வறுமை;பசி;உணவுக்கூடைதலையில்; பக்கத்தில் மனைவி – அவர் பஞ்சகவ்வியம் ஏந்திவருகிருர். நாயனுர் கோயில் நோக்கிச் செல்கிருர். வயல் வெளி; பசிமயக் கத்தால் தடுமாற்றம் – தலையில் இருந்த உணவுக்கூடை நழுவு கிறது; வயல் வெடிப்பில் விழுகிறது.

நாயனுர் வருந்துகிருர்; ' இறைவனுக்கு அமுது படையாமல் கொட்டி விட்டேனே ' எனக்கவலைப்பட்டார்; வாளை எடுத்தார்; தம் கழுத்தை அறுத்துக்கொண்டார்; ஊட்டி அறுபடும் நேரம்! ஒருகரம் – இறைவன் திருக்கரம் – அவர் கையைப்பிடிக்கிறது! மாவடுவை ' விடேல் ' என்ற ஓசையுடன் கடித்துண்பதும் கேட்கிறது. இறைவன் நாயனுருக்கு அருளுகிருன். அரிவாளால் கழுத்தை அரிந்து கொண்டமையால் அரிவாள்தாயர் எனப் பட்டார்.

நாயனுர் தமது இலட்சியம் – உணவுபடைக்கும் கொள்கை நிறைவேருதபோது உயிர்போவது போல நினைத்தார். உயிரைப் போக்கிக் கொள்ளவும் துணிந்தார் – இத்தகைய ஈடுபாட்டைக் குருமணிகள் நமக்குத் தெளிவாக உணர்த்திஞர்கள். ' நல்ல வைகளை இறைவனுக்கு' என வைக்கும் உயர்ந்தகொள்கையை

நாயனுவரலாறு காட்டுகிறது என அருளியதோடு–"நல்லவற்றை இறைவனுக்கு அளிக்கா விட்டாலும் பரவாயில்லை; கெட்டுப் போனவைகளை இறைவனுக்கு என அளிக்காமல் இருந்தாலே போதும்" என அறிவுரையும் அருளினார்கள்.

நாடுவாழ நாம்வாழ – வாழ்ந்துகாட்டிய நாயன்மார்வரலாறு களைக் குருமணிகள் அருளும்போது புத்தம் புதிய நெறிகளைக் கற்கிறோம்.

ஒவ்வொரு மாதமும் புத்துணர்வு; புதிய தெம்பு சமயத்தின் மூலம் சமுதாயத்தைச் சீர்ப்படுத்துகிறார்கள் குருமணிகள்! குருநாதரின் அரிய அருளுரைகளை எண்ணிவாழ்த்திய வாறே இல்லம் திரும்புகிறோம்.

வாழ்க குருமணிகள்!

காலக்கணக்கில் அம்மை அப்பர்

பகலும் இரவும் சேர்ந்ததே ஒருநாள். இதில் பகல், தந்தை. இரவு, தாய். சுக்கிலக்ஷய் அதாபது வளாபிறையும், கிருஷ்ண பக்ஷம் அதாவது தேய்பிறையும் சேர்ந்ததே ஒரு மாதம். இதில் சுக்கிலபக்ஷம் தந்தை. கிருஷ்ணபக்ஷம் தாய்.

உத்தராயணமும், தெக்ஷிணாயனமும் சேர்ந்ததே ஒரு ஆண்டு. இதில் உத்தராயணம் தந்தை. தக்ஷிணாயனம் தாய்.

அனைத்துலக

முதல் சைவசித்தாந்தக் கருத்தரங்கம்

அறிக்கை எண் : 3

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து, தருமை ஆதீனம், 1984, பிப்ரவரி 3, 4, 5 ஆகிய நாட்களில்தருமையில் நடத்துவதாகஇருந்த அனைத்துலகமுதல் சைவசித்தாந்தக் கருத்தரங்கம் சில தவிர்க்க இயலாத காரணங் களால்சில வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பெற்றுள்ளது.

இந்தியாவின் பாரம்பரியம் மிக்க நாகரிகப் பண்பாட்டைக் காக்கவும், தமிழகத்தின் கலைக்கூறுகளையும், பண்பாடுகளையும் உலகறியச் செய்யவும் வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒவ் வொரு குடிமகனுக்கும் உண்டு. இக்கடமை உணர்வொடும், ஏனையோர்க்கு வழிகாட்டும் உயர்நோக்கோடும், தருமை ஆதீனம் உலகளாவிய சைவ சித்தாந்தக் கருத்தரங்கினைச் சிறப்பாக நடத்தத்திட்டமிட்டது. பணிகள் குறித்தவாறு நடை பெற்றுவருகின்றன. அமெரிக்கா, கனடா பேன்ற தொலைதூர நாடுகளிலிருந்து அறிஞர்கள் பலர் இக்கருத்தரங்கில் பங்கேற்க இசைந்துள்ளனர். பார்வையாளர்களாக இதுவரை 300 அன்பர் கள் பதிவு செய்துகொண்டுள்ளனர் ஏறத்தாழ 500 பார்வை யாளர்கள் வரையில்மட்டுமே அனுமதிக்க வாய்ப்புள்ளது. பொது நிகழ்ச்சிகளில் அனைவரும் பங்கேற்க வசதி செய்யப்பட்டு வருகிறது.

தமிழில் பதினெட்டும், ஆங்கிலத்தில் இருபத்திரண்டுமாக நாற்பது கட்டுரைகள் வந்துள்ளன. இவை, சைவசித்தாந் தத்தைப்பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து நிறுவும்வகையில் வடிக்கப்பெற்றுள்ளன. இவற்றை அறிஞர்குழுஒன்று ஆராய்ந்து வருகிறது. இவை முறையாகப் பின்னர் அச்சிடப்படவுள்ளன. இதுவன்றிக் கருத்தரங்கத்தை ஒட்டிச் சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது தமிழகத்து ஆதீனக்குருமுதல்வர்களின் ஆசியுரைகள், மத்திய, மாநில அமைச்சர்கள், நீதிபதிகள்

பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகள்; சைவசித்தாந்தம் பற்றிய பத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள்: சைவசித்தாந்தம் பற்றிய அரிய தகவல் தொகுப்புக்கள் முதலியன மலரில் இடம் பெறுகின்றன. கருத்தரங்கச் செலவுகளில் ஒருபகுதியை ஈடுசெய்யும் நோக்கில், வணிக நிறுவனங்களின் விளம்பரங்களும் கோரப்பட்டுள்ளன அதுபற்றிய வேண்டுகோள் தனியே அச்சாகியுள்ளது. அன்பர்கள் உரியவாறு விளம்பரங்கள் பெற்று அனுப்புவதோடு, தாங்கள் தங்கள் நிறுவன விளம்பரங்களைத் தந்துதவ வேண்டுகின்றோம்.

பார்வையாளர் கட்டணம் ரூ. 30—00 செலுத்தி இன்னமும் கருத்தரங்கில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படுகிறது. தமிழறிந்தவர்களும், சைவசமய நாட்டமுடையவர்களும் நிறைவாகப் பங்கேற்பதே கருத்தரங்கிற்குப் பெருமைதருவதாகும். தக்கவர்களுக்கு இது பற்றி எடுத்துரைத்துப் பங்கேற்கத தூண்டுதலாக அமையநேயர்கள் கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

ரூபாய் ஐந்துலட்சம் வழங்கித் தருமையாதீனம் தொடங்கவிருக்கும், சைவசித்தாந்த ஆராய்ச்சி மையம், ரூ. 20 லட்சம் மூலதனத்தில் அமையவிருக்கிறது. பாரதநாட்டுப் பண்பாட்டையும், தமிழ்நாட்டுக் கலாசாரத்தையும் காத்து வளர்ப்பதற்காகத் தொடங்கும் இதில் பங்கேற்க நாட்டு மக்கள் அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. ரூபாய் ஆயிரத்துக்குக் குறையாமலும், அதற்குமேலும், வழங்கித் தங்கள் பங்கினை இச்சீரிய பணியில் இணைத்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

கருத்தரங்கம் பற்றிய மேல்விபரங்களும், கருத்தரங்க நாளும் அடுத்த அறிக்கைவாயிலாக நேயர்களுக்கு அறிவிக்கப்படும். கட்டுரையாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்குத் தனித்தனியே கடிதவாயிலாகத் தெரிவிக்கப்படும். அனைவரும் ஒத்துழைப்பு நல்கிக் கருத்தரங்கம் சிறக்க ஆவன செய்ய வேண்டுகின்றோம்.

கேதாரம் நோக்கி....!

திரு. வி. ஆறுமுகம் ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

(மலர் 43, இதழ் 1, பக்கம் 68 இன் தொடர்ச்சி)

4. கங்கோத்ரி அடைந்தோம்

இரவு நித்திரைக்குமுன்பு காசிவாசி சுவாமிகள் பெட்டியிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை வெளியே எடுத்தார்கள்; யாத்திரைக்கு வந்த பக்தர்கள் பத்திரமாக இருப்பதற்காகக் கொடுத்துவைத்திருந்த பவழமோதிரம், மாலைகள் இதில் இருந்தன. அவைகளோடு சுவாமிகளின் பச்சைக்கல் மோதிரமும் ' நான் இங்கேதான் இருக்கிறேன் ' என்றவாறுஒளிவீசியது! மோதிரமும் கிடைத்தது. எங்களுக்கெல்லாம் மனச்சுமையும் குறைந்தது; இரவு நிம்மதியான உறக்கத்தை மனக்குறை நீக்கும் மகேசன் அளித்து விட்டான்.

பொழுது புலர்ந்தது. 21—9—83 புதன்கிழமை; காலை உத்தரகாசி கங்கையில் நீராடினோம். நான் இதுவரை பேருந்தில் 22 ஆம் எண் இடத்தில் பயணம் செய்தேன். இன்று 6 ஆம் எண் இடம்எனக்கு வாய்ப்பாகக் கிடைத்தது. கயிலைமாமுனிவர் சுவாமிகள் பின்புறத்தில் அமர்ந்து அவர்களோடு உரையாடிச் செல்லும் பாக்கியம் பெற்றேன். எங்கோ இருந்த நான் சுவாமிகளின் காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டு விட்டேன். இதுவும் திருவருள் வாய்ப்பே.

10 கி. மீ சென்றது மானேரி என்ற இடம். இங்கு பாகீரதி ஆற்றின் குறுக்கே 150 அடி உயரம் உள்ள ஓர் அணை கட்டியுள்ளார்கள். பாசனத்துக்காகவும், மின் உற்பத்திக்காவும்நீரைத் தேக்கியுள்ளார்கள்.

அங்கிருந்து 15 கி. மீ யில் உள்ள ' பட்வாரி ' ஒரு முக்கியமான நகரம். இங்குதான் கங்கோத்ரியிலிருந்து வரும் ஒற்றையடி நடைப்பாதை பிரிந்து கேதார்நாத் செல்கிறது. ராணுவமுகாம் ஒன்று அமைந்துள்ளது.

அடுத்த 10 கி. மீ தொலைவில் கங்கநனி என்ற சிற்றூர் உள்ளது. இங்கே வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. இதமான

வெந்நீரில் நீராடி மேலே பயணத்தைத் தொடர இறைவன் அளித்த வரம் இது! கங்கநனியிலிருந்து 18 கி. மீ. தொலைவில் 10,000 அடிஉயரத்திலுள்ள ஊரில் ஆப்பில், ஆப்ரிகாட்முதலிய பழமரங்கள் பயன்தந்து நிற்கின்றன. இனிய கனிகளுக்கு அங்கே பஞ்சமில்லை.

ஜக்லா என்ற ஊரை அடைய அங்கிருந்து 1200 அடி மலையிலிருந்து கீழிறங்கவேண்டும். பகீரதியின் வலக்கரையிலிருந்து இடக்கரைக்குச் சென்று மறுபடியும் மேலே ஏறவேண்டும். இதேபோன்ற சூழலில் மேலே ஏறியும் கீழே இறங்கியும் மேலும் 6 கி. மீ. தொலைவு கடந்தால் ஹர்சில் என்னும் இடத்தை அடைவோம்.

இப்படிப் போகிற வழியிலே பல இடங்களை ஏறியும் இறங்கியும் கடக்கும் போது பரமபதம் படத்தில் ஏணியில் ஏறியும் பாம்பில் இறங்கியும் விளையாடும் அனுபவம் நம் நினைவு நினைவுக்கு வந்துவிடும்.

ஏற்ற இரக்கங்களைக் கண்டு நாங்கள் மனம் தளரவில்லை முயற்சி ஒன்றே நமக்குத்துணை! சிவதரிசனம் ஒன்றே நம் குறிக்கோள்! தடைகளை நீக்கத் தயாபரன் இருக்கிறான். இறைவனை அடைய ஏற்ற இறக்கங்களைச் சமமாக ஏற்கும் மனோபாவம் வேண்டும். பல வழிகள் மலைமேல் சென்றாலும் எல்லாம் ஒரே இடத்தில் கூடுகின்றன. இறைவனை அடையும் மார்க்கங்கள் பலவானாலும் இலக்கு ஒன்றே – இப்படிப்பல தத்துவங்கள் பயணம் தரும் படிப்பினைகள்.

சுக்கியிலிருந்து ஜக்லா, ஹர்சில் வரும்வரையிலான 13 கி. மீ பயணம் அற்புதமான அனுபவம். வானைமுட்டும் மலைகள் அடர்ந்து பருத்து உயரமான தேவதாருமரங்கள், பைன் மரங்கள், இன்னும் இயற்கை அன்னையின் ஈடில்லாக் கொள்ளை அழகு! மலைச் சிகரங்களில் பனி மூடிக்கிடக்கும் காட்சியும் சூரிய ஒளிக்கற்றை படும்போது மாறிமாறித் தெரியும் வண்ண ஜாலங்களும் நேரில் காணும் சுகம் இணையில்லாதது!

பாகீரதி என்னும் கங்கை சிலநூறு அடிகளுக்குக் கீழே பளிங்கு போன்ற நீருடன் பாறைகளில் மோதி நுரைத்துச் செல்லும் காட்சி பெருமானுக்குச் செய்த பாலபிஷேகம் வழிந்து செல்வது போன்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது. பனி மூடிய மலைப்பகுதி இலிங்கத்துக்கு வெள்ளிக் கவசம் போட்டது போல் தோன்றியது. ஆம்! உலகில் எல்லாப் பொருள்களுமே நம்மை ஆளும் ஆண்டவனைத் தானே நினைப்பிக்கின்றன.

இங்குக் கண்ட மலைக்காட்சி திருவண்ணாமலை போல என் மனத்துக்குப் பட்டது; பக்கத்தில் இருக்கும் சிகரங்கள் கோபுரங்கள் போல் தெரிந்தன. எனக்குத்தான் அப்படித் தோன்றியதோ – மற்றவர்களும் இப்படி எண்ணினார்களோ – எனக்குத் தெரியாது.

உயர்ந்தமரங்கள் சிவனைநோக்கித் தவம்செய்கின்றனவோ! 'இதைக் கவிஞர் கண்ணதாசனாக இருந்தால் இனிமையான கவிதை புனைந்து விடுவார்!' – 'ஒரு சிறந்த புகைப்பட நிபுணராக இருந்தால் இந்தக்கொள்ளையழகைப் படத்திற்குள் அடக்கி விடலாம்' இப்படி இந்த மலைக்காட்சியை ரசித்த எங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பேசிக்கொண்டோம்.

கயிலை மாமுனிவர் அப்போது ஓர் இனிய கருத்தினைச் சிந்தனைக்குப் படைத்தார்கள். புண்ணிய மலைகளின் அழகை சொற்களிலோ, தொடர்களிலோ, பாட்டிலோ, படத்திலோ அடக்கமுடியாது. எல்லையில்லா இயற்கை அழகை எல்லைக் குள்ளே அடக்க எத்தனிப்பது தோல்வியையே தழுவும்! அனுபவத்திலேதான் இந்த அழகு உணரத்தக்கது" என்றார்கள். உண்மை...முக்காலும் உண்மை!

"முகத்தில் கண்கொண்டு காண்கின்றமூடர்காள் அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என்ற திருமந்திரத் தொடர்கள் சுவாமிகளின் கருத்தை என்நெஞ்சில் உறுதிப் படுத்தியது.

பஸ் போய்க்கொண்டிருக்கிறது! மணி பகல்12. தன்யவாட் என்ற இடம். மழைகாரணமாக மலைப்பகுதி சரிந்து சாலையில் கற்கள் சிதறிக்கிடந்தன. எல்லைப்பாதுகாப்புப்படையினர் மண் கற்களை அகற்றிக் கொண்டிருந்தனர். பஸ்போக வழிஇருந்தது. மேலும் 13 கி. மீ. பயணம் செய்த 'லங்கா'வை அடைந்தோம்.

லங்கா இதுநம்நாட்டு லங்கா. ஓர்ஊர். சீனஎல்லையிலிருந்து 6 கி. மீ. தூரத்தில் உள்ளது; நம் நாட்டுப் பாதுகாப்புப்படைகள் இங்கு உள்ளன. இந்த இடத்திற்குமேல் பஸ், கார்கள் போக முடியாது. நாங்கள் எங்கள் பேருந்திலிருந்து சாமான்களை இறக்கிக் கொண்டோம்; நடந்து செல்லத் தயாரானோம்.

அங்கு இராணுவத்தில் பணிபுரியும் திண்டுக்கல் வாசுமணி, திருத்தணி நரசிம்மன், திருவண்ணாமலையைச் சேர்ந்த ஹவில் தார் நடராசன் என்ற மூன்று தமிழர்கள் எங்களை இனம் கண்டு கொண்டார்கள். எனக்கும் நண்பர் கம்பம்திரு. மனோகரன், அவர் துணைவியார் ஆகிய மூவருக்கும் நல்லஉணவு அளித்தும் சாமான்களைக் கூடாரத்தில் பத்திரமாக வைத்துக் கொண்டும்

உதவினர்கள். தங்கள் உடன்பிறந்தவர்களைக் கண்டதுபோல் அவர்கள் அடைந்த ஆனந்தம் ஒருதனி அனுபவம்! அவர்கள் சுவாமிகளிடம் திருநீறு பெற்று அணிந்த காட்சியும் கொண்ட மகிழ்ச்சியும் மனக்கண்ணில் நிழலாடுகிறது!

லங்காவிலிருந்து மறுபுறத்தில் 3 கி. மீ. நடந்து பைரோன் கட்டி என்ற ஊரை அடைய வேண்டும்; ஒற்றையடிப்பாதை; ஒன்றரை கி. மீ. கீழிறங்கி நடக்க வேண்டும். நடைபாதை மூலம் கங்கையைக் கடக்க வேண்டும். மறுபடி 1½ கி. மீ மேலே செல்ல வேண்டும். நடக்க முடியாதவர்களைக் 'கண்டி' யில் வைத்துத் தூக்கிச் செல்கிறார்கள்.

சாமான்களை எடுத்துவரக் கூலி வேலை செய்யும் சுமையாள் (Payer) உள்ளனர். பொதுவாக அவர்கள் நாணயமாகவே நடந்து கொள்கிறார்கள். நடக்க முடியாத நாலைந்துபேர் தவிர நாங்கள் நடந்தே சென்றோம்.

லங்காவிலிருந்து பைரான்கட் செல்லும் இப்பாதையில் ஆற்றின் குறுக்கே ஓர் இரும்புப்பாலம் கட்டி வருகிறார்கள். இது நம் நாட்டின் பாதுகாப்பில் மிகவும் அவசியமான ஒருசெயல். இந்தப்பாலம் கட்டும் இடத்தில் செல்லும் கங்கையை 'ஜட்கங்கா' என்பர். கங்கை இங்கே 410 அடி ஆழத்தில் ஓடுகிறது. ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பாலத்தின் நீளம் 300 அடி. ஒரே ஒரு கண்மாய் (Span) உள்ளது. பாலத்தின் உயரம் 130 அடி அகலம் 14 அடி. பாலத்தின் பொருள்மதிப்பீடு ரு 1½ கோடி. இரண்டு ஆண்டுகளாய் வேலை நடக்கிறது; மேலும் இரண்டு ஆண்டுகள் ஆகக்கூடும். ஏனென்றால் அங்கு வருடத்தில் ஆறுமாதம் தான் வேலை செய்ய முடியும். மற்ற ஆறு மாதங்களில் மனிதர்கள் அங்கு வேலை செய்யக் காலநிலை இடம் தராது; மூன்று நான்கு அடிகள் பனிமுடிக் கிடக்கும். இந்தப் பாலத்தைக் கட்டி முடித்து விட்டால் நேரே கார் அல்லது பஸ்ஸில் கங்கோத்ரியை அடையமுடியும்.

லங்காவிலிருந்து பரோன்கட் செல்லும் பாதைகளின் இருபுறங்களிலும் ஓங்கிவளர்ந்த மரக்காடுகள்! கீழே பாகீரதி நதி! சில அபாயகரமான நடைபாதைகள்; பாதுகாப்புக்கு மரக்கிராதிகள். கண்குளிரக் கண்டோம் கடவுளின் இனிய விளையாடல்களை!

பைரோன்கட்டிலிருந்து கங்கோத்ரி பத்து கி. மீ. அழகான பாதை. நடந்தும் செல்லலாம்; பஸ் அல்லது ஜீப்பிலும் செல்லலாம். நாங்கள் பஸ்ஸில் சென்றோம். மாலை மணி 4, கங்கோத்திரியை அடைந்தோம். அந்தப் புண்ணியப்பகுதியை அடைந்தபோது பக்திப் பரவசத்தால் என் மெய் சிலிர்த்தது. மனம் களித்தது.